Registered as a news paper. பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-709)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 24 (28.03.2003) வெள்ளிக்கிழமை இதழ் :176

# ஏப்ரல் 24 ஆம் திகதியிலிருந்து

# போர் நிறுத்தத்தில் புதிய வரைபுகள்!

## கண்காணிப்புக் குழு பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

**ஏப்ரல் இறுதிவாரத்தில் - கடல், தரை நடமாட்டத்திற்கென போர்நிறுத்தத்தில் சேர்க்கப்படும் புதிய திட்ட வரைபு ஒன்று, அரசு - புலிகள் - கண்காணிப்புக்குழு இணைந்த முத்தரப்புகளால் ஒருமித்து உருவாக்கப்படவுள்ளது.**

அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் கடல் வலய நடமாட்டங்கள் மற்றும் தரைப்பிராந்திய எல்லைகள் தொடர்பான சிக்கல்களை தீர்க்கும் பொருட்டு, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உத்தேச வரைபு ஒன்றைத் தயாரித்து வருகின்றது.

கடற்பிராந்தியத்தில் இரு தரப்பினரதும் நடமாட்டங்கள் தொடர்பான ஒழுங்கு முறைகளும், கடலில் போர் நிறுத்த உடன்படிக்கை மீறல் சம்பவங்கள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கான யோசனைகளும் இந்த வரைபில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ரொகில்சன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இருதரப்பினரதும் பாதுகாப்புத் தொடர்பான விடயங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள் நெற்காணிகளை மீளளிப்பதற்கு இணக்கம்!

### வவுணதீவில் புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பு

கிழக்கில் வயல் நிலங்களை முஸ்லிம்கள் பயன்படுத்துவது தொடர்பாக, தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று, நேற்று வவுணதீவில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில், விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளும், முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கிழக்கிலங்கையில் முஸ்லிம்களுக்குரிய நெற்காணிகள் தொடர்பான விவகாரம் இப்பேச்சுவார்த்தையில் முதன்மை பெற்றதாக .

(10 ஆம் பக்கம் பார்க்க)



வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் புலிகளின் சிறப்புத்தளபதி ரமேஸும், முஸ்லிம் பிரதிநிதி பஸீர் சேகுதாவூதும் கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

## பிணையில் விடப்பட்ட நெப்போலியனை மீண்டும் கைதுசெய்ய நீதிவான் உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி உறுப்பினர் நெப்போலியனை நாரந்தனை கொலை வழக்கில் விடுதலை செய்த யாழ். நீதிமன்றம், அடுத்த வழக்கான நிமலராஜன் படுகொலை வழக்கில் கைது செய்யுமாறு உடனடியாக உத்தரவு பிறப்பித்தபோது நெப்போலியன் நீதிமன்றை விட்டு வெளியேறியிருந்தார்.

இதுபற்றித் தெரியவருவதாவது:-

தீவகப் பகுதியில் தேர்தல் பிரசாரத்திற்காக தமிழ்க் கூட்டமைப்பினர் சென்ற சமயம், நாரந்தனைப் பகுதியில் வைத்து ஈ.பி.டி.பியினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்த வழக்கு மீதான விசாரணை, நேற்று யாழ். நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மேற்படி சம்பவத்தின் சந்தேக நபரான ஈ.பி.டி.பி உறுப்பினர் நெப்போலியன் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

இதேவேளை, இவரைப் பிணையில் விடும்படி வவுனியா மேல் நீதிமன்றம் யாழ். நீதிமன்றத்திற்கு முன்பு உத்தரவிட்டிருந்தது. இதன்படி, தலா ஐம்பதாயிரம் ரூபா இருஆட்பிணையில் நெப்போலியனை வெளியில் செல்லும்படியும் எனினும், பிணையில் கையொப்பம் இடும் இருவரையும் கிராமசேவையாளர், தமது பகுதியில் வசிப்பவர்கள் என உறுதிப்படுத்துதல் வேண்டும் எனவும், சந்தேக நபர் ஒவ்வொரு மாதமும் இறுதிச் சனிக்கிழமை தோறும் ஊர்காவற்துறைப் பொலிஸில் கையொப்பமிடல் வேண்டும் எனவும், இவ்வழக்கின் சாட்சிகளை அச்சுறுத்தவோ, பயமுறுத்தவோ கூடாது எனவும், அவ்வாறு ஏதாவது நடைபெறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழத் தேசிய பெண்கள் மாநாடு மட்டக்களப்பில் நேற்று ஆரம்பம்!

தமிழீழ தேசிய பெண்கள் மாநாடு மட்டக்களப்பில் நேற்று எழுச்சியோடு ஆரம்பமாகியது. மட்டக்களப்பு விபுலானந்தக் கல்லூரியில் இந்த மாநாடு ஆரம்பமாகியது.

முன்னதாக, மட்டக்களப்பு செபஸ்தியன் சந்தியில் இருந்து பெருமளவான மக்கள், எழுச்சிப் பேரணியாக எழுச்சிக் கோஷங்களுடன் விபுலானந்த இசை நடனக் கல்லூரியைச் சென்றடைந்தார்கள்.

தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகியபோது, பொதுச்சுடரை தமிழீழ மகளிர் அரசியற் துறைப்பொறுப்பாளர் தமிழினி ஏற்றியதை அடுத்து, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார்.


இதனை அடுத்து தியாகத் தாய்

(10 ஆம் பக்கம் பார்க்க)



மட்டக்களப்பு கல்லடியில் தமிழீழத் தேசிய எழுச்சி மாநாட்டையொட்டி நடைபெற்ற பெண்களின் பேரணி.

### விண்ணாணம் விநாசியர்



படம் காட்டித்தானே கனபேர் கவிழுறது....!

### மோட்டார் சைக்கிள் விபத்துகள் குடாநாட்டில் அதிகரிப்பு!

யாழ். குடாநாட்டில் முதல் காலாண்டுப் பகுதியில் வீதி விபத்துகளில் சிக்கி எட்டு பொதுமக்கள் பலியாகியதுடன், 319 பேர் காயமடைந்தனர் என, யாழ். போதனா வைத்தியசாலைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இதில் அநேகமானவை மோட்டார் சைக்கிள் விபத்துக்களாகும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகரசபைக் காணி படைகளுக்கா? யாழ்.எம்.பிக்கள் பிரதமருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர மண்டபம் அமைந்திருந்த காணியை, தமது பாவனைக்கு படையினர் எடுத்துக் கொள்ள முயற்சிப்பது குறித்து, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆட்சேபனையை பிரதமர் ரணிலுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த வீ.ஆனந்தசங்கரி, அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரே இவ்வாறு ஆட்சேபனைக் கடிதங்களை பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

## சீன மீன்பிடி ட்ரோலர் மூழ்கடிப்பு; கண்காணிப்புக் குழு அறிக்கை!

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் அண்மையில் சீன மீன்பிடி இழுவைப்படகு மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை, அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புக்கு இன்று சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையில், சம்பவம் தொடர்பான கண்காணிப்புக்குழுவின் முடிவு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று, போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் பேச்சாளர் ரொகில்சன் தெரிவித்துள்ளார்.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
(சி-626) 01-505632, 074-612656, 01-390128

**ராஜா** யாழ்ப்பாணம்.

விஜய், ரீமாசென், வடிவேல் நடித்த



**பகவதி**

10.30, 2.30, 6.30 மட்டும்.

(சி-628)

**திறைஞ்சனாஸ்**

சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00(பு.நே.)

சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த

**மாயி**

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி

**HOLLOW MAN**

(சி-627)


## சிறு விளம்பரம்



**பல்கட்டுதல**

பல்கட்டுதல், பல் கிளிப் போடுதல், நல்லமுறையில் நியாயவிலையில் மேற்கொள்ளலாம். கண்பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளை பெறலாம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம், இல 05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம்.(சி/719)


# மருதடி விநாயகர் உற்சவம்

மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயில் பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் நாளை சனிக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, அன்று முதல் 18 தினங்கள் பகல் - இரவு திருவிழாவாக நடைபெறும். பகல் உற்சவம் நிறைவு பெற்றதும் தினமும் அன்னதானம் இடம்பெறுவதுடன், மாலை உற்சவம் நிறைவு பெற்றதும் - தினமும் ஆறு.திருமுருகனின் தொடர் சொற்பொழிவும் இடம்பெறும்.

# பாராட்டி வாழ்த்துகிறோம்



## யோகாசனம், உடற்பயிற்சி மாஸ்ரர் மா.மகாநேசன்

### பாராட்டி வாழ்த்துபவர்கள்

- யோகாசன பயிற்சியை வாரந்தோறும் (செவ்வாய்க்கிழமை) 'நமது ஈழநாடு' பத்திரிகை மூலம் வெளிப்படுத்தும் எனது தம்பியும், மாணவனுமான மா.மகாநேசன் அவர்களை நன்றி தெரிவித்து பாராட்டி வாழ்த்துகின்றேன் .
  (உடற்பயிற்சி சிலம்படி மாஸ்ரர்) V.M சிவனேசன், முல்லைத்தீவு விசுவமடு, தொட்டியடி.
- எமது மாணவன் மா.மகாநேசனுக்கு எமது இந்துஜன் உடற்பயிற்சி நிலையத்தின் ஊடாக எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.
  இந்துஜன் ஜிம் K.V சச்சி, காட்டுப்புலம், கெருடாவில் தெற்கு, தொண்டமனாறு.
- எமது யோகாசன மாஸ்ரர் மா.மகாநேசன் அவர்களை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
  உடுப்பிட்டி அ.மி.கல்லூரி உயர்தர மாணவர்களான சி.நரேஷ், க.திருவரன், பா.பாலமுரளி, அ.நிசாந், அ.தினேஷ், வி.மணிமாறன், இ.விசித்திரேஷ், மா.ஜெகன், ப.செல்வகரன், வே.துஷ்யந்தன்.
- யா/கரணவாய் மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்க உப தலைவரும் எனது யோகாசன மாஸ்ரரும், அண்ணனுமான மா.மகாநேசன் அவர்களை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.
  யா/கரணவாய் மகாவித்தியாலயம், பழைய மாணவர் சங்கப் பொருளாளர் V.m.குகநேசன்.
- கல்லுவம் வல்லைவெளி இயற்கை சூழல்பாதுகாப்பு தலைவர் நேசன் அவர்களை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
  கல்லுவம் வல்லைவெளி இயற்கை சூழல் பாதுகாப்பு குழு
- உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் கல்லுவம் கிளை கிளைக்குழு உபதலைவர் மா.நேசன் அவர்களை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
  கல்லுவம் கிளை கிளைக்குழு.
- எனது நண்பன் மா.மகாநேசன் அவர்களை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.
  முறிவு, நெறிவு, விசகடி மருத்துவர் கு.சபாரத்தினம், உடுப்பிட்டி
- உடுப்பிட்டி கணேசா பேக்கறியின் எமது ஹெட்பாஸ் M.நேசண்ணா (சந்திரன்) அவர்களை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
  உடுப்பிட்டி- கணேசா பேக்கறி ஊழியர்கள்
- விசகடி வைத்தியர் M.நேசன் அவர்களை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.
  உடுப்பிட்டி கிளை முகாமையாளர் மு.சிவராசா
- முன்னாள் விசுவமடு தொட்டியடி உற்பத்திக்குழு பயிர்ப்பதிவாளரும், கால்நடை கட்டுப்பாட்டாளரும், இயற்கை உரப்பயிர்ச்செய்கையில் (பயற்றங்கொடி பயிர்ச்செய்கையில்) வன்னி மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றவரும், எனது நண்பனுமான M. நேசன் (சந்திரன்) அவர்களை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.
  உற்பத்திக்குழு எப்.அல்பேட் (திலகர்)
- சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவித்தொண்டர் மா.மகாநேசன் அவர்களை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.
  (மண்டான், கரணவாய் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள், நண்பர்கள்.)
- எமது நண்பன் மா.மகாநேசன் அவர்களை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
  அச்சுவேலி கல்பனா ஸ்ரோர்ஸ் அன் பேக்கறி உரிமையாளர் வே.சிறிகுமார், V.S.Pகுமார்
- கல்லுவம் கரவெட்டியை சேர்ந்த யோகாசன ஆசிரியர் மா.நேசன் அவர்களின் சேவை மேலும் வளர வாழ்த்துகிறேன்.
  கா.பஞ்சரத்தினம், நமது ஈழநாடு முகவர், யூனியனடி, உடுப்பிட்டி.

(சி-718)


# மலிவு விற்பனை

**20% முதல் 50% வரை**

**புதுக்கணக்குப் போடவிருப்பதால்**

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள். (சி-706)

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


# வாழ்க வளமுடன்

## HAPPY BIRTHDAY

### முதலாவது அகவையில்



பெயர் : றொ.இ.சௌமியா
முகவரி : அல்வாய் வடமேற்கு, சக்கோட்டை.

### முதலாவது அகவையில்

பெயர் : இ.தட்ஷாயணன்
முகவரி : 16/5 சீனியர் லேன், தட்டாதெரு, யாழ்ப்பாணம்.



### இரண்டாவது அகவையில்



பெயர் : பி.சாகித்தியா
முகவரி : சந்தையடி, வட்டக்கச்சி.

### ஆறாவது அகவையில்

பெயர் : ஶ்ரீ.சாருப்பிரியன்
முகவரி : சந்திரபுரம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.



**பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி :----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

# நோர்வே வெளிநாட்டுக் கொள்கையில் இலங்கைக்கே முதன்மையான இடம்!

## முன்னாள் தூதுவர் வெஸ்பேர்க் தெரிவிப்பு

(கொழும்பு)

நோர்வேயின் வெளிநாட்டுக் கொள்கையில் இலங்கைக்கு முதலிடம் வழங்கப்பட்டிருப்பதாக முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தெரிவித்தர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் ஈடுபடுமாறு ஜனாதிபதி சந்திரிகாவே கோரிக்கை விடுத்திருந்தார்.

இதையடுத்து இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிக்கு நோர்வே இணங்கியது. இதன்மூலம் நோர்வேயின் வெளிநாட்டுக் கொள்கையில் இலங்கைக்கு முதலாவது இடம் அளிக்கப் பட்டது.

அதுபோன்றே நோர்வேயின் பொருளாதார அபிவிருத்தி உதவிகளைப் பெறும் மூன்று நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அனைத்து வகைகளாலும் இலங்கைக்கு முன்னுரிமை கொடுத்து - இலங்கை சமாதான முயற்சிகளை நோர்வே முன்னெடுத்துச் செல்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹக்கீம் - புலிகளின் கைப்பொம்மை அவர்கள் கட்டளைப்படி ஆடுகின்றார்!

## லண்டனில் வைத்து சந்திரிகா குற்றச்சாட்டு

(லண்டன்)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் - விடுதலைப் புலிகளின் கைப்பொம்மையாகவே செயற்படுகிறார். புலிகளின் கட்டளைப்படி ஆடுகின்றார் எனத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தனிப்பட்ட விஜயமாக லண்டனுக்குச் சென்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் லண்டன் கிளைக் கூட்டத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியபோது -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோபல் பரிசு பெறுவதற்குத்தான் முயற்சி செய்கிறார். சமாதான முயற்சிகள் குறித்து அவர் தெளிவாக இல்லாதிருப்பதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்தத் தவறியுள்ளார்.



விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் இப்போது தவறான பாதையில் சென்றுகொண்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் நாட்டுக்குப்பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி அரசின் செயற்பாடுகளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிகமோசமாக விமர்சித்திருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (01)

### மெய்வல்லுநர் போட்டி

(நாரந்தனை)

நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இந் நிகழ்வு, அதிபர் ச.சத்தியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்துகொள்கிறார்.

# தமிழர் விடுதலைப் படையின் தலைவர் சென்னையில் பொலிஸாரால் படுகொலை

## தமிழக மனித உரிமை அமைப்புக்கள் குற்றச்சாட்டு

தமிழகப் பொலிஸார் திட்டமிட்டு தமிழர் விடுதலைப் படையின் தலைவர் ராஜாராமைக் கொலை செய்துள்ளதாகத் தமிழக மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

தமிழர் விடுதலைப் படையின் தலைவரான ராஜாராம், கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையொன்றில் உயிரிழந்தார். இது தொடர்பாகவே தமிழக மனித உரிமை அமைப்புக்கள் - பொலிஸார் மீது குற்றஞ்சுமத்தியுள்ளன.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

தமிழர் விடுதலைப் படையின் தலைவரான ராஜாராம், கோடம்பாக்கத்தில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். இவர் மீது தமிழகப் பொலிஸார் 9 வெடிகுண்டு வழக்குகளையும், 6 கொலை வழக்குகளையும் தாக்கல் செய்திருந்தனர்.

இவர் மீதான வழக்குகள் சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தன. மத்திய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவரைக் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸ் நீதிமன்றத்துக்குக் கூட்டிச்சென்றிருந்தனர்.

நீதிமன்றத்திலிருந்து - மத்திய சிறைக்கு இவரைத் திருப்பி அழைத்து வந்தபோது, வழியில் கோட்டூர்புரத்தில் ராஜாராமை மீட்பதற்குத் தமிழர் விடுதலைப் படையைச் சேர்ந்த சிலர் தாக்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது ராஜாராம் மற்றும் மீட்பு அணியில் வந்ததாகக் கூறப்படும் சரவணன் ஆகியோர் இறந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். ராஜாராம் மீட்பு அணியினரின் தாக்குதலிலேயே இறந்ததாகவும், சரவணனே பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் இறந்ததாகவும் பொலிஸார் தரப்பில் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் நான்கு பொலிஸார் காயமுற்றதாகவும், தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர். ஆனால், இந்தச் சம்பவம் தமிழகப் பொலிஸாரின் திட்டமிட்ட படுகொலை என்றும், ராஜாராமைக் கொல்ல பொலிஸார் நடத்திய நாடகம் என்றும் தமிழக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சுமத்தியுள்ளன.

# விற்பனைக்கு விடப்பட்ட 50 வீத தேயிலை கொள்வனவு செய்யப்படாமல் திரும்பியது!

(கொழும்பு)

மலையக மக்கள் தேயிலைத் தொழிலை மட்டும் நம்பியிராமல், சுய தொழில் முயற்சிகளிலும் இறங்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கேட்டுள்ளார்.

ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குலை அடுத்து, இலங்கையின் தேயிலை ஏற்றுமதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, ஈராக் மீதான போரையடுத்து - இலங்கையின் தேயிலைச் சந்தை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. விற்பனைக்காக அனுப்பப்பட்ட தேயிலையில் 50 சத வீதமானவை கொள்வனவு செய்யப்படாமல் திரும்பி வருவதாக தேயிலை ஏற்றுமதிச்சபைத் தலைவர் தெரிவித்தார்.

தாழ்நிலத் தேயிலை கிலோ ஒன்று 20 ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளது. பெருமளவில் தேயிலையைக் கொள்வனவு செய்யும் நாடான ஈராக், இம்முறை தேயிலைச் சந்தைக்குக் கேள்விப் பத்திரங்களைக் கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி கண்டிருப்பதால், இலங்கையின் பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்படும்நிலை உருவாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# குடாரப்புத் தரையிறக்க வெற்றிவிழா நிகழ்விலிருந்து...







நேற்றுமுன்தினம் நடைபெற்ற - குடாரப்புத் தரையிறக்க வெற்றிவிழா நிகழ்வில் - தரையிறக்கத்தின் நினைவுக்கல்லை தளபதி கேணல் பால்ராஜ் திரைநீக்கம் செய்வதையும், நிகழ்வில் பங்கேற்ற மூத்த தளபதிகளையும் படங்களில் காணலாம்.





நிகழ்வில் பங்கேற்ற கேணல் பானு, கேணல் சூசை, மூத்த தளபதி பொட்டம்மான், தினேஸ் மாஸ்ரர், கேணல் ஜெயம், உட்பட விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளைப் படங்களில் காணலாம்.

ஆரோக்கியமான வாழ்வுக்கென
வடிவமைக்கப்பட்டது




புத்திசாலித்தனமானது
- உள்வரும் வெளிச்செல்லும் பகுதிகள் தட்டையாக இருப்பதால் கசியாமல் இறுக்கமாக மூடப்பட்டுள்ளது.
- இலகுவாக பொருத்தக்கூடியது.
- குறிப்பிட்ட தேவைகளுக்கென பல்வேறு அளவுகளிலும் வடிவமைப்புக்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பலம்வாய்ந்தது
- 10 வருட அன்டன் உத்தரவாதம்.
- கெட்டியாக உருக்கி வார்க்கப்பட்ட பிளாஸ்டிக் என்பதால் நிலைத்து நிற்கக்கூடியது.
- எல்லா காலநிலைக்கும் ஏற்ற உறுதியான வெளிப்புற மேற்பரப்பு

ஆரோக்கியமானது
- நுண்கிருமி உற்பத்திக்கு இடமில்லாததால் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான தூய குடிநீர்.
- அகன்ற வாய் காரணமாக உட்பக்கம் சுத்தம் செய்ய வசதியானது.
- புரியுள்ள மூடியால் மூடப்பட்டுள்ளதால் பூச்சிகள், தூசுகள் உட்புக முடியாது




- செங்குத்தானது
- கிடக்கையான தாங்கி
- மடிப்புத் தாங்கிகள்
- பல்-அடுக்கு தாங்கி
- உட்காப்பிட்ட தாங்கி

ஆகியனவும் கிடைக்கும்

உற்பத்தியும் சந்தைப்படுத்தலும்
ANTON

செண்ட் அன்டனீஸ் இன்டஸ்ரீஸ் குறூப் (பிறைவேட்) லிமிட்
தலைமை அலுவலகம், வாடிக்கையாளர் சேவை நிலையம்,
752/1, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 9.
சந்தைப்படுத்தும் பிரிவு: 516, முதலாம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழு - 10.
ஹொட்லைன்: 422075, 422093. தொ.பே.: 320622-3-4. தொ.நகல்: 431496.
E-mail: antonmkt@slt.lk
காட்சி அறை: 320, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை, கொழும்பு 3. தொ.பே.: 370747.
Website: www.anton.lk

(சி-717)


# சின்னஞ் சிறு செய்திகள்

## அகவொளியில் பட்டமளிப்பு விழா

அகவொளி குடும்ப வளத் துணை நிலையத்தில் இரண்டு வருடங்கள் குடும்பவளத் துணையாளர் கற்கை நெறியை கற்றுப் பூரணப்படுத்திய மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நாளை பி.ப 3.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

அகவொளி குடும்பவள நிலையத்தில் நடைபெறவுள்ள இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொள்வார்.

## சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் உள்ள நாவலர் மணி மண்டபத்தில் வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெறும் சிறப்புச் சொற்பொழிவில் இன்று பி.ப 5.30 மணியளவில் 'சமய வாழ்வு' என்ற தலைப்பில் பதில் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு உரையாற்றவுள்ளார்.

(76)

## 'பூரணையில் மரணம்' இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும் 'சினி யாத்ரா' திரைப்பட விழாவில் இன்று பிரசன்ன விதானகேயின் நெறியாள்கையில் உருவான புரசந்த கலுவர (ஓர் பூரணையில் மரணம்) திரையிடப்படவுள்ளது.

## சதுரங்கப் போட்டியில் முன்னணி

(நவிண்டில்)

வடமராட்சி வலய மட்டசதுரங்கப் போட்டியில் கரணவாய் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 19 வயது ஆண்கள் பிரிவு முதலாம் இடத்தையும், 19 வயது பெண்கள் பிரிவு 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் - வே.றமணன், இ.சுகீநதரன், ம.வாசுதேவன், ந.குலதீபன், சி.சுபிக்காந், கு.தேவராசா, த.ஜெகதீசன் ஆகியோரும், பெண்கள் பிரிவில் - நா.பிருந்தா, சி.சிவரஞ்சினி, சி.டர்ஸ்னா, த.அபிராமி, பா.துஷ்யந்தினி, பு.ஜெனீட்டா, தே.ரேகா ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

(116)

## வடமராட்சி வலய மட்ட விளையாட்டுப் போட்டிகள்

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி ஏப்ரல் மாதம் 6,7,8 திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலய உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (17)

# பெண்கள் மீதான வன்முறை அதிகரிப்பு; நீதித்துறையின் கூடுதல் கவனம் தேவை!

## மகளிர் அபிவிருத்தி நிலையம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதை கடந்த சில தினங்களாக பத்திரிகைகளில் வெளியாகியுள்ள வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான செய்திகள் உறுதிப்படுத்துவதாக உள்ளது என மகளிர் அபிவிருத்தி நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் -

ஊர்காவற்றுறையில் கர்ப்பிணிப் பெண் தலையில் கோடரியால் தாக்கிக் கொலை , 15 வயதுச் சிறுமி மீது வல்லுறவு, மண்ணெய் ஊற்றி யுவதி தீ வைப்பு, தனியே வந்த பெண் மீது வல்லுறவு முயற்சி - இவை யாவும் அண்மைக் காலத்தில் நடந்த சம்பவங்களே. இந்நான்கு சம்பவங்களையும் மேலோட்டமாகப் பார்க்கும்போது வீட்டு வன்முறை மூலம்,, பாதிக்கப்பட்ட பெண் - பாலியல் வல்லுறவு, பாலியல் வக்கிரம், பெண்களுக்கு பாதுகாப்பின்மை போன்ற பல பிரச்சினைகளாலும் பாதிக்கப்படும் படிப்படியான பரிமாணத்தைப் பெற்றுள்ளமை தெளிவாகின்றது.

வீட்டில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகள் பலதரப்பட்டவைகளாக இருந்தபோதிலும் அதன் உச்சக் கட்ட வெளிப்பாடே இவ்வாறு கொடூரமான சம்பவங்களாக வெளிப்படுகின்றன.

பெண்ணிற்கு வீட்டில் பாதுகாப்பில்லை. வீதியில் பாதுகாப்பில்லை. தனியாக நடமாட முடியவில்லை. என்பது மட்டுமல்ல. பெண்கள் உரிமைகள், சுதந்திர நடமாட்டம் என்பவை எல்லாமே கேள்விக் குறியாகி விட்டன.

சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் கொடூரமான சம்பவங்கள் தட்டிக் கழித்து விடக் கூடியவை அல்ல. இவை மீண்டும் மீண்டும் தொடர வழி ஏற்படாதவாறு குற்றவாளிகள் இனங்காணப்பட்டு தகுந்த தண்டனை வழங்குவதில் நீதித்துறையினரின் கடுமையான அவதானிப்புகள் தேவை என்பதை மகளிர் அபிவிருத்தி நிலையம் தனது அறிக்கையின் மூலம் கேட்டுள்ளது.

## பதிவாளர் அலுவலக நடமாடும் சேவை

(நவிண்டில்)

காலங்கடந்த பிறப்பு, இறப்பு தொடர்பாக நடமாடும் சேவை பருத்தித்துறை மேலதிக மாவட்ட பதிவாளர் காரியாலயத்தினால் வெகு விரைவில் நடத்தப்படவுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களை அவ்வப் பகுதி கிராமஅலுவலரிடம் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதுவரை பிறப்பு இறப்பு பதிவுகளை செய்யாதவர்கள் தத்தம் பகுதி கிராம அலுவலரிடம் இது தொடர்பாக ஆலோசனைகளைப் பெறலாம். (116)

# அரியாலைப் பகுதியில் கிடுகுத் தட்டுப்பாடு

தென்னம் கிடுகுகளுக்குப் பெயர் பெற்ற அரியாலைப் பகுதியில் தற்போது தென்னம் கிடுகுகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

கடந்தகால யுத்தம் காரணமாக இராணுவத் தேவைகளுக்காக தென்னை மரங்கள் அழிக்கப்பட்டதாலும் அரியாலை கிழக்கு, பூம்புகார் போன்ற பகுதிகளில் தென்னம் தோப்புகளுக்குச் சொந்தக்காரர்கள் செல்ல அனுமதிக்கப்படாததாலும் இதுவரை பல காணிகளில் மிதிவெடிகள் அகற்றப்படாததாலும் இந்த நிலைமை தோன்றியுள்ளது.

# தகவல் வழங்குவோர் கொலைக்கு அரசாங்கம் உடந்தையாக உள்ளது

## சிறிலங்கா சுதந்திரக்கட்சி குற்றச்சாட்டு

இராணுவத்துக்குத் தகவல்களை வழங்கும் தமிழ் புலனாய்வு ஏஜெண்ட்கள் தொடர்ச்சியாகச் சுட்டுக் கொல்லப்பட்டு வருவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக தகவல் வழங்குவோர் சுடப்பட்டு வருவது, அவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்கத் தவறியுள்ளதென்பதையே காட்டுகிறது. புரிந்துணர்வு உடனபடிக்கைக்குப் பின்னர் 20 இற்கு மேற்பட்ட தகவல் வழங்கும் ஏஜெண்ட்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன், இராணுவத்துக்கும் தகவல் வழங்கும் தமிழ் ஏஜெண்ட்கள் பற்றிய தகவல்களை அரசாங்கமே புலிகளுக்கு வழங்கி அவர்கள் கொல்லப்படுவதற்கு வழி செய்ததாகவும் சுதந்திரக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

# பெண்களின் அபிவிருத்தியில் கியூடெக்கின் பங்கு

கேள்வி: கியூடெக் நிறுவனத்தில் பெண்களுக்கான ஒரு பிரிவு தனியாக அமைக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

பதில்: பெண்கள் இன்று சொந்த வீட்டில்கூடப் பாதுகாப்பற்றநிலையில் பரிதாபத்திற்குட்பட்டவர்களாக வாழ்கின்றார்கள். வெளியில் சொல்லவும் முடியாமல், உள்ளுக்குள் ஒடுக்கப்பட்டநிலையில் மனநோயாளிகளாகப் போகும் பெண்கள் பலரும் உள்ளனர். வீதிகளில் செல்லும் போது இம்சைப்படுத்தும் வார்த்தைகளால் துனபுறுத்தப்படும் பெண்களுமுண்டு.

பாலியல் பற்றிய சரியான உணர்வோ, அறிவோ அற்ற பருவத்தில் மிகச்சிறிய வயதில்கூடப் பெண் என்ற காரணத்தினால் இத்தகைய துன்புறுத்துதலுக்கு ஆளாகும் பெண்களுமுண்டு. இப்படியான துஷ்பிரயோகங்களினால் தற்கொலை செய்து, வாழ்வை முடித்துக்கொள்பவர்களும்- ஏன், கொலை செய்யப்படுபவர்களும் பெண்களாகவே இருக்கின்றனர். அண்மைக் காலங்களில் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் இவற்றுக்குச் சான்று பகிர்கின்றன.

இந்நிலையில்தான் பெண்கள்- சமூக, பொருளாதார, கல்வி என்பனவற்றில் முன்னேற்றமடையவும், சமூக ஒன்றிப்பில் மேன்மையடைந்து தம்மைப் பலப்படுத்திகொள்ளவும், தமது வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் மேலாதிக்கமுள்ளவர்களிடமிருந்து தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளும், ஆற்றலை அடையச்செய்யும் பொருட்டு கியூடெக் நிறுவனத்தினால் பெண்களுக்கான ஒரு பிரிவு சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

கேள்வி: கியூடெக் நிறுவனப் பெண்கள் பிரிவின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கிறது?

பதில்: வளர்ந்துவரும் பொருளாதார மாற்றத்திற்கேற்பக் குடும்பப் பொருளாதாரத்தைச் சமப்படுத்தும் பங்கு பெண்களின் கைகளில் தங்கியுள்ளது. அரசியல் ரீதியாகக்கூடப் பெண்கள் வளர்ந்து வருகின்றார்கள். தமது உரிமைகளை நிலைநாட்டவும், நிர்வாகத்திறன்களை வளர்த்துக் கொள்ளவும், உண்மைக்கும், நீதிக்கும் குரல்கொடுக்கவும், தமது பிரச்சினைகளைத் தாமே இனங்கண்டு தீர்த்துக் கொள்ளவும்- அரசியல் அறிவைப் பெண்கள் வளர்த்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இவ்வாறான தேவைகளைக் கொண்ட பெண்களின் குறைகள் நீங்கி, பலமுள்ள பெண்களாக மாற்றமடையவேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் இன்று குடாநாட்டில் பரவலாக்கப்பட்டு, 17 இடங்களில் பெண்கள் சங்கமும், 3 இடங்களில் துணையிழந்த மாதர் சங்கமும் செயற்பட்டுவருகின்றது. இச்சங்கங்களில் சுமார் 1200 பேர் அங்கம்வகிக்கின்றார்கள். இவர்கள் அனைவரையும் நிலையம் பல விதத்திலும் ஊக்கப்படுத்தி வளர்த்து வருகின்றது. ஒவ்வொரு சங்கங்களிலும் சேமிப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

சமூகரீதியான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்தி, சமூகமட்டத்தில் பரஸ்பர புரிந்துணர்வு வளர்க்கப்படுகின்றது.

ஒவ்வொருவரும் ஏனைய குடும்பங்களை அறிந்து கொள்ளவேண்டிய தேவை உணர்த்தப்பட்டு, சமூக ஐக்கியம் பலப்படுத்தப்படுகின்றது.

ஒரு குழு - ஏனைய குழுவினருடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும், ஒரு கிராமம் - மறுகிராமம் சென்று அங்குள்ளநிலை அறிந்து, உத்வும் மனப்பாங்குடன் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளவும் வழி ஏற்படுத்திக்கொடுக்கப்படுகின்றது.

தலைமைத்துவத்திற்குத் தேவையான அறிவூட்டல்கள் வழங்கப்படுவதுடன், பொறுப்புக்களைச் சரியாக நடைமுறைப்படுத்துவதற்கான தொடர் வழிநடாத்தலும், மீளாய்வுப் பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

பொதுஇடங்களில்- பொதுநிகழ்வுகளில் முன்னின்று செயற்படும் துணிவினைப் பெற்றுக்கொள்ள எமது நிலையச் செயற்பாடுகளில், துணையிழந்த மாதர்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றது.

தேசியரீதியாக நடைபெறும் பெண்கள் அபிவிருத்திக் கருத்தரங்குகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அனுப்பப்பட்டு, அவர்கள் மூலமான ஏனைய பெண்களுக்கு அந்தப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

கைத்தொழில் பயிற்சிகள் சில வழங்கப்படுவதுடன், சுயமான தனிப்பொருளாதார வளத்திற்காகவும், பொதுவாகக் கூட்டுச் சேர்ந்து கைத்தொழில்களில் ஈடுபடவும் தேவையான அறிவூட்டலுடன், மீளளிப்புக் கடன்களும் வழங்கப்படுகின்றது.



எம்.பத்மா
கியூடெக் பெண்கள் பிரிவு

கேள்வி: பெண்கள் பிரிவால் அமைக்கப்பட்ட பெண்கள் சங்கங்களின் செயற்பாடுகள் வெற்றிகரமாக அமைந்துள்ளதா?

பதில்: ஆம். இன்று எமது பெண்கள் சங்கங்கள் பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளன என்று சொன்னால் மிகையாகாது.

சங்கத்தின் அங்கத்துவப் பெண்கள் எல்லோரும் சேமிப்பில் வெற்றி கண்டுள்ளனர்.

தமது குடும்பங்களில் தங்களது பங்களிப்பைக் குறையின்றிச் செயலாற்றுவதுடன், குடும்பத்தில் ஆண்களிடமிருந்து ஒத்துழைப்பையும், பாராட்டுதலையும் பெற்றுவருகின்றார்கள்.

சமூக செயற்பாடுகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திச் சமூகவிழுமியங்களை வளர்ப்பதில் முன்னின்று உழைக்கின்றார்கள்.

தனிப்பட்ட பொதுக்குறை, நிறைகளையும், தேவைகளையும் தமக்குள் புரிந்துணர்வுடன் கலந்துரையாடுகின்றார்கள். இதனால், ஒருவர் ஒருவருக்கு உதவும் மனப்பாங்குடன் சமூக உணர்வுகளை வளர்த்துக் கொள்கின்றார்கள்.

தங்களால் இயன்றளவு சமூகபொது வேலைத்திட்டங்களில் பங்கெடுப்பதுடன், சமூக அநீதிகளையும் ஒழிப்பதற்கு ஒன்றாகக் குரலெழுப்பி, செயலாற்றி, வெற்றியும் கண்டுள்ளார்கள். குடும்பப் பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய சிறுகைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றார்கள்.

துணையிழந்த மாதர் சங்கத்தினர் கூட்டுத் தொழில் முயற்சியில் ஈடுபட்டு, முழுக்குடும்பத்திற்கும் தேவையான பொருளாதார வளத்தைத் தேடிக்கொள்கிறார்கள்.

துணையிழந்த மாதர்கள் தமது பிள்ளைகளை வளர்ப்பதற்கு யாரோ ஒருவருடைய உதவியை எதிர்பார்த்திருக்கும் சிறுமைநிலையிலிருந்து விடுபட்டு, தாம் உழைத்த பணம் என்ற பெருமையுடன் குடும்பத்தை நடாத்தி வருகின்றார்கள்.

தம்மை ஒத்தவர்களின் குடும்பநிகழ்வுகளில் உறவுமுறைக்கு அப்பால், சென்று முழுமையான பொறுப்பெடுத்து நல்லுறவுடன் செயலாற்றுகின்றார்கள்.

சமூகத்தில் விதவைகள் என்று ஒதுக்கப்பட்டவர்கள்- இன்று சமூகநிகழ்வுகளில் முன்னின்று செயலாற்றுவதுடன், சமூகத்தின் தேவைகளை இனங்கண்டு எமது நிறுவனத்துடனும், ஏனைய நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு அவற்றை நிவர்த்தி செய்வதில் பொறுப்புடன் செயலாற்றுகின்றார்கள்.

குறிப்பாக ஆண்கள் செய்யும் வேலைத் திட்டங்களாகக் கருதப்படும் - வீட்டுத்திட்டம், மலசலகூடம் அமைத்தல், கைத்தொழில் பயிற்சிக்கு ஒழுங்குசெய்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றார்கள்.

எமது பிள்ளைகளை எப்படி வளர்க்கப் போகின்றோம் என்று அங்கலாய்ப்புடன் வாழ்ந்தவர்கள்- பிள்ளைகளின் கல்வி முன்னேற்றங்களில் அதிகவனமெடுப்பதுடன், தேவையானபோது தாயாகவும், தந்தையாகவும் செயற்படுகின்றார்கள்.

தங்களால் ஒதுக்கப்பட்ட இப்பெண்களில் வளர்ச்சிகண்டு வெட்கமுறும் சமூகம், இன்று அதிசயித்தும் நிற்கிறது. ஆண்களுடன் சேர்ந்து செயலாற்ற முன்வருவதும், அவர்களிடம் ஆலோசனைகள் பெறுவதும் பாராட்டத்தக்க வளர்ச்சிகள். துணையிழந்த மாதர்களின் ஒருங்கிணைந்த செயற்பாட்டுக் குழுவாகச் செயலாற்ற முன்வந்து, அவர்களது துணையையும், வழிநடாத்தலையும் கோரி நிற்பதும் பாராட்டத்தக்க வளர்ச்சிகள்.

இராணுவத்தின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட ஓர் பெண்ணையும், அவளது குடும்பத்தையும் பாதுகாத்ததுடன், உடனடியாகச் செயற்பட்டு அப்பெண்ணை வைத்தியசாலையில் சேர்த்தவுடன், பிள்ளைகளையும், வீட்டையும் பொறுப்பேற்றுக்கொண்டு குற்றம் புரிந்தவர்களுக்கெதிரான நடவடிக்கைகளையும் எடுத்து வெற்றி பெற்றார்கள் எமது பெண்கள்.

கேள்வி: பெண்களின் செயற்பாடுகள் பற்றி இறுதியாக உங்கள் கருத்து என்ன?

பதில்: எதிர்காலத்தில் பெண்கள் மாண்புடனும், ஆளுமைத்திறனுடனும் செயற்பட்டுத் தமக்கெதிரான வன்முறைகள், அநீதியான கட்டுப்பாடுகள் அனைத்தையும் இல்லாதொழித்து சமபலத்துடன் வாழ்வதுடன், தனித்துவிடப்பட்டவர்கள் மனந்தளராது, இழந்துவிட்டதை இழந்ததாகக் கருதி ஏற்றுக்கொண்டு முன்நிற்கும் பொறுப்புக்களை கிரமமாகச் செயற்படுத்தும் துணிவுடன் வாழ்ந்து முழுமை பெறவேண்டும் என விரும்புகிறேன்.



**நேர்காணல்:**
**உஷா, கலானந்தி**

## இதய ராகம்...

நீலவானில் நிலா
வைகறைப் பொழுதில் எழுந்திருக்கின்றது.
மேகத்தின் மெல்லிய திரை அதனைச் சுற்றி
மோகன வட்டமிட்டுள்ளது.
அதன் மருங்குகளில்
வானவில்லின் வர்ணங்கள் ஒளிர்கின்றன.
அமைதி எங்கும் ஆட்கொண்டுள்ளது.
மெல்லச் செவிமடுத்துக் கேள்,
எங்கிருந்தோ பாடும் அவளது
இதய ராகம் காற்றோடு கலந்து வருகின்றது.
ஆக்காண்டிப் பறவை அவள் குரலை
எங்கும் எடுத்துச் செல்கின்றது
இளந்தென்றல் அவள் மென்மணத்தை
எங்கும் தூவிச் செல்கின்றது
அவளது வரவை உன்னால்
உணர முடிகின்றதா?
இதோ அழகிய நட்சத்திரங்கள்
அவள் கண்களிலிருந்து ஒளிபெற்று
மின்னுகின்றன.
கடலும் தொடுவானமும் அவள் வண்ணம்
கொண்டு மிளிர்கின்றன.
அதே ஒலி....
அதே ராகம்....
மீண்டும் மீண்டும் தொடர்கின்றது.
நன்றாகச் செவிமடுத்துக்கேள்-
அவள் இதயத்தின் ஒலிக்கூடாக
உன் பெயர் உச்சரிக்கப்படுகின்றது.
உதடுகளால் அவள் அதை உச்சரிப்பதில்லை.
காற்று அவள் உதடுகளை மூடச் செய்துள்ளது
ஆயினும்,
உதடுகளுக்கு இல்லாத சக்தியை
அவள் தன் இதயத்திற்குக்
கொடுத்திருக்கிறாள்.
அதனால் தானோ என்னவோ,
பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலும்
அவளது ராகம் ஒலிக்கின்றது
முடிந்தால் அதற்கப்பாலும் சென்று
செவிமடுத்துக்கேள்

காற்று,
அதனால் அவளது
இதயத்தினுள் புகமுடியாது
அது அவளது ராகத்தைத்
தடுக்க முடியாது தவிக்கட்டும்.
அவள் கண்களில் மினுங்கும்
சோகக் கதிர்களை
உன் மனத்திரை பதிவு செய்யக்கூடும்.
நீ பெற்றுக் கொண்ட
துலங்களைக் கூட
அவள் கண்கள்
மீளவும் பெறவும் கூடும்
எனினும்,
அவளது இதயராகம்
உண்மைக் கவிஞனின்
பேனா முனையினால் கூட
இதுவரை எழுதப்படாதவை.
அவளைச் சுற்றி
எத்தனை வேலிகள்
இவைகளைகத் தாண்டி
உன் மனத்திரையை அடையும்படி
உடன்பதிவு செய்து கொள்,
இந்தப் பொல்லாக் காற்று,
அதனைக்கூட அள்ளிச் செல்லக்கூடும்.

- சுல்பிகா



## சிலுவை

இறக்கை நீ விரிக்கும் போதும்
நான் விரிக்கும் போதும்
ஒடிந்து போகிறது
நம் குழந்தையின்
ஏதோ ஒரு நம்பிக்கை

அறையில் அடைபட்ட
தென்றல் உஷ்ணமாவது
இயற்கைதானே

தோப்போ நந்தவனமோ
மரம் கிளைகள்
பழங்கள் மலர்கள்
எவ்வளவாயின் என்ன
சிறகில்லாத கிளிக்கு
ஆடம்பர பொருள் மட்டுமா
குப்பைக் கூடையும் கூட
அப்படியே இருக்கும் உனக்குள்



பூகம்பமோ புயலோ
வந்துபோன பின்னும்

எந்தன் ஒரு தும்மலின்
வேகம் பொறுக்கமாட்டாமல்
வெளித்துப்புவாய்
குப்பையாக

மீண்டும் மீண்டும்
உயிர்த்தெழுந்தாலும்
இன்னும் எத்தனை முறை
அறைவாய் சிலுவையில்!

~ மரியா

## உருளைக் கிழங்கு அல்வா



**தேவையான பொருட்கள்-**
உருளைக்கிழங்கு- 1/2 கிலோ,
சர்க்கரை- 1 கிலோ,
நெய்- 1/4 போத்தல்
ஏலப்பொடி- ஒரு கரண்டி,
கேசரிப்பவுடர் - சிறிதளவு.

செய்முறை:- உருளைக்கிழங்கை நன்கு கழுவி, ஒரு பாத்திரத்தில் நீர் ஊற்றி கிழங்கை வேகவிடவும். அவிந்த பின் எடுத்து ஆறவிட்டுத் தோல் உரித்து, கட்டியில்லாமல் மசிக்கவும். பின்னர் வேறொரு பாத்திரத்தில் சர்க்கரையைக் கொட்டி, நீர் விட்டுப் பாகு தயாரிக்கவும். இலேசான சுடுநீரில் கேசரிப் பவுடரைக் கலந்து, சர்க்கரைப் பாகில் சேர்க்கவும். அதற்குள் மசித்த உருளைக்கிழங்கையும், நெய்யையும், ஏலப்பொடியையும் சேர்த்துக் கிளறவும், பின்னர் நெய் தடவிய தட்டில் கொட்டிச் சிறிது ஆறிய பின் துண்டாக வெட்டிப் பரிமாறலாம்.

# பெண்ணாகி வந்த பூங்காற்று

## கோகிலா மகேந்திரன்

"வாழ்க்கைச் சூழலுக்கு இயைபாதல்" என்ற தேவையே மனித ஆளுமையை உருவாக்குகிறது என்று 'ஹார்ட்மன்' நினைத்தார்.

தன்னை முழுமையான அல்லது நிறைவுள்ள மனிதராக்கல் என்ற உந்தலே அதனை உருவாக்குவதாக 'அட்லர்' கருதினார். இரக்கத்திலிருந்து விடுபடும் சுதந்திரத்துக்கான தேவையே இந்த ஆளுமை உருவாக்கம் என்பது 'சுலிவான்' இன் கருத்து.

சுதந்திரப் படைப்பாக்க முயற்சிக்கான தேடலும், தனது அறியாத தன்மையை முகங்கொள்ளும் தைரியமும் ஒருவரின் ஆளுமைக்கு வழிகாட்டும் பாதைகள் என்பார் 'ஃபுரொம்'.

மனித இருப்பியல்லாத கொள்கைகளை முன் வைத்த மாஸ்லோ, றொஜேர்ஸ் ஆகியோரின் கருத்துக்களுக்குச் சமகாலத்தில் முக்கியத்துவம் தரப்படுகிறது. அவர்களது கருத்தின் அடிப்படையில் ஆளுமை நிறைந்த பெண்களாக வரவிரும்புவோர் பின்வரும் இயல்புகளை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

* அனுபவங்களுக்குத் தம்மை முற்றாகத் திறந்துவிட வேண்டும்.
* தமது சொந்த உணர்வுகளைக் கண்டு பயப்படாதிருக்கவேண்டும்.
* இருப்பியல் அல்லாத வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் சுதந்திரமாக இயங்கவேண்டும்.
* தம்மிடத்தில் அதிக நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.
* படைப்பாற்றல் மிக்கவர்களாக வேண்டும்.
* மரபு வழிவந்த சட்டதிட்டங்களையும், கோலங்களையும் சுய சிந்தனையின்றி அப்படி அப்படியே பின்பற்ற வேண்டியதில்லை.
* மாற்றமுடியாத கொள்கைப் பிடிப்புள்ளவராக இருக்க வேண்டியதில்லை.
* தனது சுயத்தை ஏற்றுக்கொண்டு பிரச்சினை மைய வாழ்வு வாழலாம்.
* தான் எளிமையாக இருப்பார். அதேசமயம் மற்றவர் மீது தேவையற்ற பரிதாப உணர்வு கொள்ளமாட்டார்.
* இரசனையில் புதுமை காண்பவராயும், உடனுக்குடன் தீர்மானம் எடுக்கக் கூடியவராயும் இருப்பார்.
* சிலசமயங்களில் தனித்திருப்பார். ஆயினும் மற்றவர்களை அப்படியே ஏற்றுக்கொள்ளுவார்.
* வழிகளுக்கும், இலக்குகளுக்கும் இடையில் வேறுபாடு காணக்கூடியவராக இருப்பார்.

இத்தகைய இயல்புகளை வளர்த்துக்கொள்வதில் பெண்கள் அனைவரும் உற்சாகம் காட்டுவோமா? அபிவிருத்தி என்ற சொல்லுக்குப் பல வரைவிலக்கணங்களைக் கொடுக்க முடியுமாயினும், மறைந்திருக்கும் ஆற்றல்கள் வெளிப்படும்நிலை என்று கூறினால் அது தவறாக இருக்கமுடியாது.

வானகத்தின் சரிபாதி பெண்களாக இருப்பதனால், அவர்கள் ஒவ்வொருவரதும் தனிமனித அபிவிருத்தி என்பது- அவர்கள் வாழும் சமூக அபிவிருத்திக்கும் இட்டுச்செல்லும். சமூக அபிவிருத்தித்தான் பின்னர் ஒரு நாட்டின் அபிவிருத்தியாக வெளிப்படும். இன்றைய உலகில் பெண்களின் தனிமனித அபிவிருத்தி சிறப்பாகக் காணப்படுகின்ற ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகிய கண்டங்கள்- வளர்ச்சியடைந்த நாடுகளைக் கொண்டிருப்பதை அவதானிக்கமுடியும். ஆகவே, வளர்முக நாடுகள் என்று கொள்ளப்படுகின்ற ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் பெண்களின் அபிவிருத்தியில் கூடிய அக்கறை செலுத்தும்போது அவற்றின் வளர்ச்சி இலகுவாக்கப்படும்.

எமது நாட்டின் பெண்கள் தனிமனித அபிவிருத்தியை அடைவதற்குப் பல தடைகள் காணப்படுகின்றன. மாஸ்லோ என்ற உளவியல் அறிஞரின் கருத்துப்படி- மனிதனின் தேவைகள் யாவும் நிறைவு செய்யப்படும்போதுதான் அவன் முழுமை பெறுகிறான். தேவைகளில் மிக அடிப்படையானவையாக- உணவுத் தேவை, நீர், ஒட்சிசன், நித்திரை, பாலியல் தேவைகள், புலன்களின் தூண்டல் தேவை ஆகிய உடற்றொழிலியல்களுக்குச் சிக்கல் இருக்கிறது. உலகநாடுகள் யாவும்



பலவற்றையும் ஆட்கொண்டுள்ள வறுமை- பெண்களையும், குழந்தைகளையுமே கூடுதலாகத் தாக்குகிறது. ஒரு தனிப்பட்ட குடும்பத்தில் உணவுப்பற்றாக்குறை இருக்குமாயின், அங்கு பட்டினி இருப்பவள் தாயாகவே காணப்படுகிறாள். எமது பிரதேசத்தில் 60% இற்கும் மேற்பட்ட பெண்களில் இரும்புச் சத்துக் குறைபாடு காணப்படுவது ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. ஆகவே, தனிமனித அபிவிருத்தி தொடர்பாகச் சிந்திக்கிறபோது, ஒவ்வொரு பெண்ணும் நிறையுணவைப் பெறுகின்றநிலை முதலில் உறுதிசெய்யப்படவேண்டும்.

சமூக அபிவிருத்திக்குப் பெரும் தடைக்கல்லாக இருக்கின்ற சீதனப்பிசாசு, பல பெண்கள் திருமணமாகும் வாய்ப்பைத் தொடர்ந்து தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறது. பெண்களுக்குத் திருமணமாகாதபோது, அவர்கள் சமூகத்தில் இறங்கி வேறு பயனுள்ள வேலைகள் செய்வதையும் சமூகம் நிறுத்திவிடுகிறது. தமது பாலியல் தேவை பூர்த்தி செய்யப்படாதநிலையில் இப்பெண்கள் மனச்சோர்வு நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

ஒருவரது அடிப்படை உடற்றொழிலியல் தேவைகள் நிறைவேற்றப்பட்டால், அடுத்த படியில் வருவது பாதுகாப்புத் தேவை. கடந்த பதினைந்து வருடங்களாக எமது நாட்டில் நிலவிவந்த போர்ச்சூழல், பெண்களின் பாதுகாப்புநிலைகளைப் புயல்போல உலுக்கி விட்டுள்ளது. தொடர்ந்து வந்த பல இடப்பெயர்வுகள் பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கு வீடற்றநிலையை உருவாக்கியது. அவர்களது உடைமைகள் முற்றாக இழக்கப்பட்டன. உயிர் அச்சுறுத்தல் தொடர்ந்து இருந்துவந்தது. வாழ்வில் தாம் காணநேரும் என்றொருபோதும் எதிர்பார்க்காத கோரச் சம்பவங்களைக் காணநேர்ந்ததால், அவர்கள் மனவடுநிலைக்கு உள்ளாகினர். வாழ்வின் எதிர்காலம் நிச்சயமற்றுப் போனதால், வாழ்வின் இலக்குத் தெளிவற்றதாகியது. இவையெல்லாம் படிப்படியாக மாறி, இன்றைய சமாதானச் சூழலில் ஒவ்வொரு பெண்ணுக்கும் உடல், உள ரீதியான பாதுகாப்பு உறுதி செய்யப்படும்போதுதான் தனிமனித அபிவிருத்தி சாத்தியப்படும்.

(தொடரும்...)

# தலைவி நீ தலை நிமிர்!!!



பெண்ணே, இந்தநாட்டு நிதி மந்திரியால் சாதிக்க முடியாததை வீட்டுத் தலைவியும் நிதிநிர்வாகியுமான உன்னால் சாதிக்கமுடியும்.

ஆம். உனது திட்டமிட்ட வாழ்க்கைச் செலவு- வீட்டை மட்டுமல்ல நாட்டையும் சீராக்கும்.

சிந்தித்துப்பார், உனது வீட்டின் வரவு எவ்வளவு? செலவு — எவ்வளவு? என்று உனக்குத் தெரியுமா? உன் செலவுகளைப் பட்டியலிடு. எவ்வளவு தேவையற்ற செலவுகள் செலவிடப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர்த்திருக்கலாமே.

உன் வீட்டின் அருகில் நீ ஒரு சிறிய கடையை நடத்துகிறாய். அதில் இலாபம் வருகிறதா? நட்டம் வருகிறதா? என்று நீ கணக்கிட்டுப் பார்த்திருக்கிறாயா? பலர் இப்படிக் கடைகளையோ, வேறு வியாபாரங்களையோ நடத்துகின்றனர். அவர்களுக்குச் சரியாக எவ்வளவு முதலிட்டோம். பின் எவ்வளவு இலாபமோ, நட்டமோ அடைந்திருக்கிறோம். இன்று உள்ள இருப்பு எவ்வளவு என்பதெல்லாம் தெரிவதில்லை. இதனால் நஷ்டமடைந்து கொண்டிருக்கும் வியாபாரத்தில், இலாபம் பெறுவதாகக் கருதி வீணாகப் பணத்தைச் செலவு செய்து நடுத்தெருவில் நிற்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

நீ அப்படிப்பட்டநிலைக்குத் தள்ளப்படக்கூடாது. உன் கடையின் கொள்வனவு, விற்பனவு, ஏனைய செலவுகள், கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் ஆகிய சகல கணக்குகளையும் எப்படிப் பதிவுசெய்து உன் வியாபாரம் எப்படி நடக்கின்றதென்பதை அறிந்துகொள்ளும் ஆற்றலை நீ வளர்த்துக்கொள். தெரியாவிட்டால் சரியாகச் சொல்லித்தரக்கூடியவரை அணுகிக் கணக்குகளை எழுதும் முறைகளைப் பயின்று கொள்ளலாம். நமக்குத் தெரியாததையும் புரியாததையும் அறிந்தவர்களிடம் கேட்டறிய வெட்கப்படக்கூடாது.

வீட்டு வரவு- செலவையும் திட்டமிடுவது உன் பொறுப்புத்தான். நாட்டைப் போன்றே பெரும்பாலான வீடுகளிலும் பற்றாக்குறை பாதீடுதானென்பது அனைவரும் அறிந்ததுதான். உன் வீட்டின் வருமானத்தை முதலிலே கணக்கெடுத்துக்கொண்டு செய்யவேண்டிய செலவுகளையும் கணக்கிட்டுப்பார்.

வழமையான உணவுப்பொருட்கள், போக்குவரத்து, பிள்ளைகளின் பாடசாலைச் செலவு, ரியூஷன் செலவு, போன்றவற்றுடன் நின்று விடாதே. கோவிலுக்கோ, வேறு தானதருமங்களுக்கோ இடைக்கிடை செலவு செய்யத்தான் வேண்டும். அடிக்கடி வீட்டிலுள்ளோருக்கு மாறி மாறி நோய் வரும். மருந்துச் செலவு, வைத்தியச் செலவென்று எதிர்பாராமல் வந்துநிற்கும். உறவினர்களும், நண்பர்களும் தமது வீட்டில் நடைபெறும் விசேஷங்களுக்கு எம்மை அழைப்பார்கள். வெறுங்கையுடன் போய் நிற்கமுடியுமா? உனது பிள்ளைகளின் எதிர்காலம் முக்கியமானது. அதற்காகவும் ஒரு தொகை சேமித்தேயாகவேண்டும். இவற்றுக்காக வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கினால் பாதீடு பற்றாக்குறையாகவே இருக்கிறதா?

உடனே சோர்ந்துவிடாதே. குறை நிரப்ப என்ன செய்யலாமென்று திட்டமிடு. ஆம். திடீரென்று முன்னேவந்து நிற்கும் செலவுகளுக்கெல்லாம் கடன்படத் தொடங்கினால் உன் வீட்டுநிலை என்னவாகும்? அதற்காகவே வரவு- செலவைத் திட்டமிட்டு எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளைச் சமாளிக்க எவ்வாறு வருமானத்தைக் கூட்டுவதென்றும் திட்டமிட வேண்டியது அவசியமாகின்றது.

அதிகப்படியான வருமானம் பெற எத்தனையோ வழிகளுண்டே. வீட்டிலிருந்து செய்யக்கூடிய எத்தனையோ வேலைகள் இருக்கின்றனவே.

அடுத்ததாக வீட்டில் இடம்பெறும் அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்தலாம். இதற்கும் திட்டமிடுதல் அவசியமே. எனவே திட்டமிட்டுச் செயற்பட முதலிலே நீ பழகவேண்டும்.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

# காத்திருத்தல்

## கவிதைச்சோலை

நேற்றுப்போல இருக்கிறது
எங்கள் திருமணம் நடந்தது
பந்தலைப் பிரிக்குமுன்
வந்த உறவினர் போகுமுன்
நீதான் போய் விட்டாய்
என் மன ஆழத்திற்கு
இது தெரிந்து தானிருந்தது
இருந்தும்
திருமணம் சிலவேளை
உனை மாற்றலாமென...
பலவந்தமாக
ஆம், பலவந்தமாகத்தான்
உன்னை மணந்தேன்
எனக்கு அப்போது
உன் லட்சியத்தின் களபரிமாணமோ
உன்னைத் தடைசெய்ய முடியாதென்பதோ
விளங்கியிருக்க வேயில்லை.
இப்போது துக்கப்படுகிறேன்
அன்று உன்னைத்
தடை செய்ய நினைத்ததற்கு
உன் லட்சியத்தின் நியாயம்
இப்போது தானே புரிகிறது.
எனினும் ஒரு சந்தேகம்
மனைவியான படியால் தானே
உன் சாதனைகளில் மகிழ்தலும்
உனை நினைத்து அழுதலும்
சாத்தியமாயின.
இரவுகள் தூங்குவதற்கென்பது
என்வரையில் பொய்யாயிற்று
நிசப்த ராத்திரிகளில்
இடையிட்டு எழும் ஒலிகளில்
காலடி ஓசைக்காகக்
காத்திருந்து காத்திருந்து....
கனத்த இருளினுள்
கறுப்புப் பூனையைத்
தேடித் தேடித் தோற்று...!



சிலவேளை காலடிகள்
கனத்த பூட்ஸ்களாய்
நெஞ்சில்
கண்ணிவெடி விதைக்கும்.
ஆனால்,
நான் இன்னும்
நம்பிக்கை இழக்கவில்லை
காத்திருந்த இரவுகள்
கணக்கு வைக்கமுடியாமற்
பெருகி விட்டன
கல்யாணத்தன்று நட்ட முருக்கு
கொம்பும் கிளையுமாய்
சிவப்பாய் பூத்திருக்கு
பாலர் வகுப்புக்குச் செல்லும்
மகன் கேட்கிறான்
"ஏனம்மா
எங்கட வீட்டுப் பின் கதவை
நீ பூட்டுறேல்ல?"
"முன்கதவு திறந்திருந்தா மட்டும்
கண்டவன் எல்லாம் நுழைவான்
பூட்டு பூட்டு எண்டு வாய்"
எனது காத்திருத்தல்கள்
அவனுக்குப் புரிய
இன்னும் சில காலமாகலாம்
அதன் பின்
அவன்
கேள்வி கேட்க மாட்டான்.

- மைத்ரேயி.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## பெண்கள் மீதான கொடுஞ்செயல்

யாழ்.குடாநாட்டில் கடந்த இரு வாரங்களுக்குள்ளாக நடந்திருக்கும் சில சம்பவங்கள் - பெண்கள் மீதான வன்முறைகளும், கொடுமைகளும் சமூகத்தில் தீவிரம் பெற்றுவருகின்றனவோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவனவாக அமைகின்றன.

ஊர்காவற்துறையில் மனைவியின் தலையை வெட்டிப் படுகொலை செய்த கணவன், உடுப்பிட்டியில் உயிருடன் மண்ணெண்ணெய் ஊற்றி எரிக்கப்பட்ட இளம்பெண், தந்தையால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட மகள் என ஒரு சில நாட்களில் மட்டும் யாழ்.குடாநாட்டில் நடந்திருக்கும் நிகழ்வுகள் - பெண்களுக்கேற்பட்டுவரும் ஆபத்துக்களையும் அச்சுறுத்தல்களையும் பற்றி உடனடியான, ஆழ்ந்த கவனம் செலுத்தப்பட வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் தெருக்களில் சுதந்திரமாக, அச்சமின்றிப் பெண்கள் நடமாடமுடியாத அளவுக்கு இங்கு, பெண்கள் மீதான வன்முறைகள் அப்பட்டமாகவே நிகழ்ந்து வந்தன.

ஒருபுறம் படையினரால் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்ட நாடூரங்கள் அரங்கேற, மறுபுறம் - சமூகச் சீரழிவைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுமாப்போல - காடைத்தனம் புரிந்துவந்த சில இளைஞர் கோஷ்டிகளால் - பெண்கள் மீது பகிரங்கமாகவே வன்முறைகளும் அடாவடித்தனங்களும் எழுந்தமானத்திற்குக் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்ததை எவரும் மறந்துவிடமுடியாது.

அதேவேளை - பாலியல் திரைப்படங்களும் எவ்வித கட்டுப்பாடின்றியும் - சமூகத்தில் புழக்கத்திற்கு விடப்பட்டிருந்தன.

சமூகக் கட்டுப்பாடு என்பது புறந்தள்ளப்பட்டு - சீரழிவுகளை ஊக்குவிக்கும் சக்திகளும் யாழ்.குடாநாட்டில் வலுவாக இயங்கியதன் பெறுபேறாக - குடாநாட்டில் பெண்கள் தனித்துத்திரியவும், இரவில் நடமாடவும் - அச்சப்படும் பயங்கரமானதொரு சூழலே நிலவிவந்தது.

ஆனால் - புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் இவையாவும் கட்டுப்படுத்தப்பட்டு, நிலைமை சுமுகமடைந்தபோதும் -

இன்று - அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் சம்பவங்கள் - இவ்வாறான சம்பவங்களின் பேரில் கடுமையான நடவடிக்கைகள் இன்னமும் தேவை என்ற அவசியத்தையே வலியுறுத்தி நிற்கின்றன.

கலாசாரத்தைப் பேணுகின்ற இளைஞர்களால்- சமூகத்தில் பெண்களுக்கு எதிராக பகிரங்கமாக, வெளிப்படையாக நடந்த வன்முறைகள் கட்டுப்படுத்தப்பட்டது போல -

உள்ளார்ந்த வகையில் நடைபெறும் பெண்கள் மீதான கொடூரமான செயல்களும் கவனத்திற் கொள்ளப்பட்டு- இனிமேலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாதவாறு - நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றே மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

அதேவேளை - காதல் மற்றும் திருமண விவகாரங்களிலும் பெண்கள் பாதிக்கப்படும் சம்பவங்கள் - வெளித்தெரியாத நிலையிலும் பரவலாகவே இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் கூட - வெளிநாட்டிலுள்ள தனது மகனுக்கு மணம் முடிப்பதாகக்கூறி, பெண்ணை அனுப்பிவிட்டு - அங்கு மகன் திருமணம் செய்ய மறுத்ததுடன்- அப்பெண் வீட்டாரிடமிருந்து சீதனத்தையும் பெற்று ஏமாற்றிய தாய் பற்றிய செய்தி பத்திரிகையில் வெளியானமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று - காதலித்துக் கைவிடுதலும், கர்ப்பமாக்கிவிட்டு ஏமாற்றுதலும், பலதார மணமும் யாழ். குடாநாட்டில் குறிப்பிடத்தகுந்தளவில் நடைபெற்றே வருவதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை - குடாநாட்டிலுள்ள அகதிமுகாம்களில் நடைபெறும் திருமணங்கள் பலவும் சட்டபூர்வமான பதிவினைச் செய்யாது நடைபெறுவதாகவும், பதினெட்டு வயது பூர்த்தியாக முன்பே பெண்களுக்குத் திருமணமாகி வருவது சாதாரண விடயமாகிவிட்டது எனவும் - அண்மையில் மேற்கொள்ளப்பட்ட யுனிசெப்பின் ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

எனவே - இதுபோன்றவை பற்றிய எச்சரிக்கையும், தெளிவான விழிப்புணர்வும், சமூகரீதியாக அவற்றை உள்வாங்கவேண்டிய தேவையும் இன்றளவில் - அவசியம் கருத்தூன்றிச் செய்யப்பட வேண்டியனவாகவே உள்ளன.

பெண்களுக்கெதிரான குற்றங்கள், வன்முறைகள், கொடுமைகள், அச்சுறுத்தல்கள் என்பவை சமூகத்தின் ஒரு பகுதியினருக்கான பாதிப்பு என்பதாக இல்லாமல்- அது, முழுச்சமூகத்தையும் நாகரீகமற்ற, சிதைவை நோக்கிச் செல்லும் பாதைக்கே நகர்த்தும் என்பதை மனதிற்கொண்டு - இவ்வாறான கொடுஞ்செயல்களை, மிருகத்தனங்களை இல்லாதொழிப்பதற்கு அனைவருமே உறுதிபூண்டு செயற்பட வேண்டும்.

பெண்கள் மீதான மிலேச்சத்தனமான செயற்பாடுகளுக்கு உரிய தண்டனைகளோ, எதிர்ப்புக்களோ கிடைக்காதுவிடின் - அது - இதுபோன்ற சம்பவங்களைத் தூண்டும், ஊக்குவிக்கும் எதிர்மறையான செயற்பாடாகவும் அமைந்துவிடும் என்ற அபாயமும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

# போகிற போக்கில்...

வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவதற்குப் பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தேர்தலில் குதிக்கப் பலர் தயாராகிவிட்டனர். பதவி ஆசை யாரைத்தான் விட்டுவைத்தது. வடககு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு நிதியுதவி செய்யவும் சிலர் தயாராகிவிட்டனர். அயல்நாடு ஒன்று வடக்கு - கிழக்கு அரசியலில் முக்கிய மறைமுகப் பங்காற்றி வருவது வாசகர்கள் அறிந்ததே. அந்த அயல் நாடும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுபவர்களுக்குப் பணவுதவி செய்யத் தயாராக இருக்கிறதாம். தமிழர்கள் மீது யார் யாருக்கெல்லாம் அக்கறை பார்த்தீர்களா?

இது இவ்வாறிருக்க, தமிழ் அரசியற்தலைவர் ஒருவரும் தனது மனக் குமுறலை வெளிக்கக்கத் தொடங்கியுள்ளார். உள்ளூராட்சித் தேர்தல் நெருங்க நெருங்க இப்படியான மனக்குமுறல்கள் வெளிவருவது இயற்கைதானே. தமிழர்களில் அரசியல் வரலாற்றைத் திரும்பிப் பார்ப்போம். நாம் தமிழ்ச் சமுதாயத்தின் விடிவுக்காக நாம் ஒற்றுமையாகக் கைகோர்த்து நின்றோமா? எம்மை பகடைக்காயாகப் பெரும்பான்மைச் சமூகம் பயன்படுத்தவில்லையா? எமது சமுதாயம் இன்று அனுபவிக்கும் இன்னல்களுக்கு யார் காரணம் என்பதை நாம் எப்போதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? எம்மிடையே ஒற்றுமை இருந்திருந்தால், அன்னிய சக்திகள் எம்மைப் பிரித்தாண்டிருக்க முடியுமா?

தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதுதான் எமது இலட்சியம் என நினைக்கும் அரசியல் தலைவர்கள், தமிழர்கள் தன்மானத்துடன் வாழவேண்டும் என ஏன் நினைக்கத் தவறுகின்றார்கள் என்று தெரியவில்லை.

தமிழ் மக்களுக்குத் தொலைநோக்குப் பார்வையுண்டு. புத்திஜீவிகள் எனத் தம்மை அழைத்துக்கொள்வோரைவிட, சாதாரண பாமர மக்களுக்கு நாட்டுப்பற்று அதிகம் எனலாம்.

யுத்தநிறுத்த அமைதிச் சூழ்நிலையில் பல அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ள முயற்சிகள் நடைபெறுகின்றன. இத் திட்டங்களில் பல வெளிநாட்டு நிறுவனங்கள் பங்குபற்றுகின்றன. இச்செயற்றிட்டங்களை நெறிப்படுத்துவதற்குப் பல உத்தியோகத்தர்கள் தேவை. இப்பதவிகளுக்குப் பலர் முண்டியடிப்பதையும் காணமுடிகின்றது. குறிப்பாக, ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் போட்டிபோடுகின்றனர். அவர்களிடையே இழுபறி மற்றும் வெட்டுக்கொத்துக்கள், குழிபறிப்புக்கள்.

இவ்வாறான சம்பவங்கள் ஏன் நிகழ்கின்றன. எம்மிடமுள்ள சுயநலப்போக்கேயாகும். எப்போது எம் மக்களின் மீது எமக்குப் பற்று ஏற்பட்டு, சேவைசெய்யும் மனப்பான்மை ஏற்படுகின்றதோ அப்போதுதான் அபிவிருத்தித் திட்டங்களின் பயனை மக்கள் முழுமையாக அனுபவிக்க முடியும் என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். நாம் இச்சந்தர்ப்பத்தில் தென்னாபிரிக்க நாட்டைப் பற்றித் தெரிந்துகொள்வோம். அந்நாட்டில் பெரும்பான்மையினத்தவர்களாக வாழ்ந்த கறுப்பு இன மக்கள் - சிறுபான்மையின வெள்ளை இனத்தவர்களால் அடக்கி ஒடுக்கப்பட்ட வரலாற்றை உலகறியும். கறுப்பின மக்களின் விடுதலையே நெல்சன் மண்டேலாவினதும், அவர் சார்ந்த கட்சியினரதும் இலட்சியமாக இருந்தது. அதனால்தான் நெல்சன் மண்டேலாவால் - கறுப்பின மக்களுக்கு விடுதலை பெற்றுத்தர முடிந்தது. எந்த ஒரு நாட்டினரின் பணத்திற்காக அவர்கள் தமது மக்களைக் காட்டிக்கொடுக்கவில்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். தென்னாபிரிக்காவின் விடுதலைப் போராட்ட வரலாற்றை, உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடத் துடிக்கும் அரசியல் தலைவர்கள் படிப்பார்களா? இல்லாவிடில் தமிழ் மக்களின் 20 வருடகாலப் போராட்ட வரலாற்றையாவது நினைத்துப் பார்ப்பார்களா?

மார்ச் 22 ஆம் திகதி, சனிக்கிழமை கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் தேசிய சங்க சம்மேளன மாநாடு நடைபெற்றது. ஒருநாடு, ஒரு சட்டம் என்ற கோட்பாட்டில் இலங்கை - பௌத்த இராச்சியம் என்பதைப் பிரகடனப்படுத்தும் முகமாகவே இந்தச்சிறப்பு மாநாடு நடைபெற்றதாக அச்சம்மேளனத்தின் செயலாளர் அத்துறலியே ரத்னதேரர் கூறியுள்ளார்.

எமது நாட்டிற்கும், இனத்திற்கும், மதத்திற்கும் ஆபத்து ஏற்படுமானால் ஆயுதமேந்திப் போராடவும் பௌத்த மதக் குருமார் தயங்கமாட்டார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவரது பேச்சிலிருந்து நாம் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் இதுதான் "ஆங்கிலேயர்களால் புகையிலைச் செய்கைக்காக வடக்கு - கிழக்கிற்குக் கொண்டுவரப்பட்டவர்களே அங்கு வாழும் தமிழர்களாவர். அவர்கள் கள்ளத்தோணிகள். தாயகம் ஒன்று அவர்களுக்குக் கிடையாது. வடக்கு - கிழக்குத் தமிழர்களின் தாயகம் அல்ல. அது தமிழர்களின் தாயகமென்றால், வரலாற்றுச் சான்றுகளுடன் நிரூபிக்கட்டும். வடக்கு-கிழக்கு சிங்களவர்களுக்குச் சொந்தமானது. சிங்களப் பௌத்தர்களின் நாடு இது என்று கூறியதோடு, அத்துறலியே ரத்ன தேரோ நின்றுவிடவில்லை. இலங்கையில் கிறிஸ்தவ அடிப்படைவாதம் நாட்டை ஆக்கிரமித்துள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தவேண்டும். கிறிஸ்தவ அடிப்படைவாதிகளை இனங்கண்டு நாடு கடத்தவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இந்த தேசிய சங்க சம்மேளன மாநாட்டிற்கு வெளிநாட்டு பௌத்த குருமாரும் வந்திருந்தனர் என்பது இங்கு சுட்டிக் காட்டுதற்குரியது.

கௌதம புத்தரது சிந்தனைகளைப் பற்றி எமது நாட்டில் பலரும் கூறி வருகின்றார்கள். ஆனால், கௌதம புத்தரைப் பற்றிச் சரியாகப் புரிந்துகொண்டால் இப்படிப் பேசுவார்களா என்பது வேறுவிடயம்.

தென்னிலங்கையில் தமிழருக்கு எதிரான இன உணர்வுகள் தூண்டப்பட்டு வருகின்றன. பொதுஜன ஐக்கிய முன்னணி முதற்கொண்டு ஜே.வி.பி. வரை இதற்கு விதிவிலக்கல்ல. சமாதான முயற்சிகளைக் குழப்ப முனைப்போடு செயற்பட்டு வருவது ஜே.வி.பி. என்பது உலகறிந்த செய்தி.

ஜே.வி.பியினர் அரசியல் இலாபத்திற்காகச் சிங்கள மக்கள் மத்தியில் இனவாத அடிப்படையிலான தவறான கருத்துக்களைக் கூறிச் சிங்கள மக்களைத் திருப்பி அதன்மூலம் இரத்த ஆறு ஓட வேண்டுமென விரும்புகின்றனர் என மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கூறியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டுதற்குரியது.

இருபது வருடகாலப் போரில் தமிழ் மக்கள் பட்ட இன்னல்களை சிங்கள மக்களிடம் எடுத்துச்சொல்ல எம் தலைவர்களில் எத்தனை பேர் முன்வந்துள்ளார்கள் என்பதைச் சற்று எண்ணிப் பாருங்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பிரதமராக இருந்த டிங்கிரி பண்டா விஜயதுங்க தமிழர்களை மரஞ்செடிகொடிகளுக்கு ஒப்பிட்டமையை நம் தலைவர்கள் பலர் மறந்துவிட்டார்கள். எமக்குத் தேவை பதவிதான். எம்மைப் பற்றி யார் என்ன சொன்னாலும் எமக்குக் கவலையில்லை. தேர்தலில் நிற்பதே நம் குறி என்ற நிலை ஏற்படுமானால் நம்மிடையே அன்னிய சக்திகள் ஊடுருவுவது தவிர்க்க முடியாது. அத்தோடு தமிழ் மக்களின் தலைவிதியும் திசைமாறிச் செல்லும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

உள்ளூராட்சித் தேர்தல் வந்தால் என்ன, நாடாளுமன்றத் தேர்தல் வந்தால் என்ன எமக்கிடையே ஒற்றுமை அவசியமாகும். நாம் எல்லோரும் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்றாகக் கைகோர்த்து தமிழ் மக்களின் விடிவுக்காகக் குரல் கொடுக்கும்போது, அன்னிய சக்திகளால் எம்மை ஒன்றுமே செய்துவிட முடியாது

தேர்தல்தான் எமது குறி என்று அரசியல் தலைவர்கள் நினைப்பார்களேயானால் மக்களிடமிருந்து தகுந்த பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியநிலை ஏற்படும் என்பதை மறந்துவிடக்கூடாது.


இன்றைய சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து மீண்டுமொரு யுத்தத்திற்கான சூழ்நிலை ஏற்பட எவருமே அனுமதிக்கக்கூடாது. அப்படி யுத்தம் ஏற்பட்டால் 50 ஆயிரம் பேருடன் யுத்தபூமிக்குச் சென்று சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாகச் சர்வ மதங்களுக்கிடையிலான அமைப்பின் தலைவர் மாதம்பாகம அஸ்வஜி தேரர் கூறியுள்ளார்.

**கொழும்பிலிருந்து உதரன்**

சிங்கள பௌத்த குருமார்களுக்குள்ளேயும் சமாதானத்தை விரும்புபவர்களும் இருக்கின்றார்களா? என்று எண்ணத் தோன்றுகின்றதா?

சமாதானத்தை மட்டுமல்ல தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமென எண்ணும் புத்திஜீவிகளும் சிங்கள மக்களிடையே இருக்கின்றார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால், அவர்கள் அரசியல்வாதிகளல்லர்.

## நாடும் நடப்பும்




# கடற்தொழில் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு இன்று கலந்துரையாடல்

(கொழும்பு)

யாழ். கடலேரியில் மீன்பிடித் தொழிலில் ஏற்படும் பிணககுகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் இன்று காலை 10.30 மணிக்கு - சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கான அழைப்பிதழ் கடிதங்கள் யாழ். மாவட்டத்திலுள்ள சகல கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் - வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்துக்கு ஒவ்வொரு சங்கங்களிடமிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணக் கடலேரிப் பகுதியான பொன்னாலையிலிருந்து ஆனையிறவு வரையான கடற்பிரதேசத்தில் போர்க்காலச் சூழ்நிலையினால் உருவாகியுள்ள சீர்கேடுகளையும், தொழிற்பிணக்குகளையும் இனங்கண்டு, ஆராய்ந்து மேற்படி கடலேரியில் சிறப்பான தொழில் வளத்தை உருவாக்கும் முகமாகச் சங்கப் பிரதிநிதிகளிடையே இக் கலந்துரையாடல் நடாத்தப்படவுள்ளது.

எதிர்காலத்தில் தொழில் வளங்களை மேம்படுத்தும் முகமாக நடத்தப்படும் இக்கலந்துரையாடலில் கருத்துக்களைத் தெரிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

சீநோர் வடகடல் நிறுவனத்தில் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களைப் பங்குதாரராக இணைத்துக்கொள்வது பற்றியும், கூடியவிரைவில் கடலுணவுப் பொருட்களை, சமாசம் - சங்கங்களினூடாகக் கொள்வனவு செய்து, ஏற்றுமதி செய்வதற்குரிய அனுமதியைப் பெறுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

# ஈராக்கின் வரலாற்றுப் பாரம்பரியமும்

*நேற்றைய தொடர்ச்சி...*

சதாமுக்கு அயலவர்கள் என்ற பேச்சுக்கு இடமில்லை. இஸ்ரேல் என்கின்ற நாடு எவ்வாறு அரபு நாடுகளால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறதோ அதேபோன்றேதொரு நிலை ஈராக்கிற்கும் உண்டு. யூதர்களுக்கும் - அராபியர்களுக்குமுள்ள முரண்



அமெரிக்காவை தீவிரமுடன் எதிர்க்கும் ஈராக்கியர்.

பாடு போலவே ஒரே இன, மதக்குழுவைச் சேர்ந்த அயல்நாடுகளைக் கொண்ட ஈராக்கிற்கு ஏற்பட்டுவிட்டது. சுற்றி வளைக்கப்பட்ட இஸ்ரேலுக்கோ, அமெரிக்கா என்ற ஒரு பலமான பின்னணி உதவியுண்டு, ஆனால் - ஈராக்கிற்கு அவ்வாறு எந்தப் பின்னணியும் இல்லாது இருப்பது துரதிர்ஷ்டம். எனினும், நீண்டகாலமாகச் சதாம் என்கின்ற ஒரு தனிமனிதர் ஈராக்கில் 1979 இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்திலிருந்து இற்றைவரை நீடித்துவருவது ஒரு சிறப்பம்சமாகும். மேலைத்தேய ஊடகங்களே "ஈராக்கின் உறுதியான மனிதர்" **(Iraqi Strong Man)** என்று வர்ணிக்கும் அளவிற்கு எதிரிகளால் அவர் புகழப்படுகிறார்.

இரண்டாம் உலக யுத்த காலத்திலிருந்து அமெரிக்கா தனது மண்ணில் யுத்தத்தை நடத்தவில்லை. அதனால், அமெரிக்க மண்ணில் ஒரு துளி இரத்தம்கூடச் சிந்தவில்லை. அத்திலாந்திக், பசுபிக் என்ற இரு சமுத்திரங்களை அரணாகக் கொண்ட அமெரிக்க நிலம் - வடக்கிலும், தெற்கிலும் பிரச்சினை எதுவுமின்றிக் கையாண்டு வருகிறது. அமெரிக்கப் புவியியல் அமைவிடத்துடன் ஒப்பிடும்போது ஈராக் மிகவும் சிக்கல் வாய்ந்த பின்னணியைக் கொண்டிருக்கிறது.

1990 ஆம் ஆண்டின் பின் அமெரிக்கா பெற்றுக்கொண்ட உலக முதன்மையும், அதீத நம்பிக்கையும் சரிந்துபோன முதற்சந்தர்ப்பம் 2001 செப்ரெம்பர் 11 ஆகும். ஒசாமா - பின்லேடனால் திட்டமிட்டு நடத்தப்பட்ட விமானத் தாக்குதல் அமெரிக்கா தனது சகல துறைகளையும் மறுமதிப்பீடு செய்யவைத்தது. அந்த ஒரு சம்பவத்தையே அமெரிக்க மக்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. சென்ற மாதம் ஒசாமா விடுத்த தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில், அமெரிக்கா - ஈராக் விடயத்தில் கடும்போக்கைக் கையாண்டால், அதன் பின்விளைவை அமெரிக்கா எதிர்கொள்ளவேண்டியேற்படும் என விடுத்த அறிக்கை - அமெரிக்கப் பொதுமக்களை உடனடியாகப் பாதிக்கச் செய்தது. அத்தகைய தாக்குதல் ஒன்று உடனடியாக ஏற்பட்டுவிடும் என்ற பயத்தினால் ஒரு சில நாட்களுக்காவது பதுக்கி வைத்திருக்கக்கூடிய அத்தியாவசியப் பொருட்களை வாங்கி வைப்பதில் அவசரம் காட்டியதைத் தொலைக்காட்சிகளில் காணமுடிந்தது.

தற்போது நடைபெறும் வளைகுடா யுத்தம் - **II** செப்ரெம்பர் 11 போன்றவொரு பின்விளைவை அமெரிக்காவில் ஏற்படுத்தினால் தவிரவேறு எதற்கும் அமெரிக்கா பயப்படவேண்டிய அவசியமில்லை. இன்னும் நெருக்கடியானநிலை ஒன்று ஏற்பட்டால், சதாம் தரைவழியாகவோ, விமான மூலமோ ஈராக்கைவிட்டு வெளியேற வாய்ப்பில்லை. இது சதாமுக்கு நன்றாகத் தெரியும். எனவே ஈராக்கிற்கு வெளியில் யுத்த நெருக்கடியை உருட்டிவிடச் சதாம் எத்தனிக்கலாம். ஈராக் - குவைத்திற்குள் தாக்குதலை ஆரம்பித்ததற்கான காரணமும் இதுவாகும். ஏற்கனவே குவைத்திற்குள் நிலைகொண்டிருக்கும் அமெரிக்க இராணுவத்திற்கு எதிராகத் தாக்குதலை மேற்கொள்வது ஈராக்கிற்கு இரட்டைப் பயனைத்தரும். ஏற்கனவே எதிரியாக்கப்பட்ட குவைத்தையும் பழிவாங்க இத்தருணத்தைச் சதாம் பயன்படுத்திவருவதுடன், தென்ஈராக்கிலிருந்து முன்னேறும் அமெரிக்க - பிரித்தானியப் படைநகர்வின் வேகத்தினை ஓரளவிற்காவது தடுக்கமுடியும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை மத்தியகிழக்கில் நிலைகொள்ள வேண்டும் என்பதே பிரதான தேவையாகும். உலகின் சகல பாகங்களிலும் அமெரிக்க இராணுவக் கிராமங்களை அமைக்கும் மூலோபாயத்திட்டத்தின் ஓர் ஏற்பாடாகவே இன்னோர் நடவடிக்கை அமைந்துள்ளது. அமெரிக்காவின் இந்த நோக்கத்திற்கான சந்தர்ப்பம் 1991 இல் ஈராக் குவைத்திற்குள் ஊடுருவியபோது அமெரிக்காவிற்குக் கிடைத்தது. ஆனால், இம்முறையோ அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதபோதிலும், பல மாதங்களுக்கு முன்பே ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் உள்ளன என்ற குற்றச்சாட்டை மையமாக வைத்து - ஒரு புதிய முறுகல் நிலையைச் சிருஷ்டித்து, இரண்டாவது வளைகுடாப் போர் என்ற ஒரு தலையங்கத்தையும், புதிய உலக ஒழுங்கொன்றினையும் தோற்றுவித்திருக்கிறது.

இதுவொரு வலுக்கட்டாயமான ஏற்பாடு என்பதாலும், ஐ.நா.வரன்முறைகளுக்கு ஊடாக அணுகப்படாமல் தன்னிச்சையான முடிவுகளாக மேற்கொள்வதாலும், 1991 இல் பாலைவனப் புயல் யுத்தத்தில் தோள் கொடுத்த எல்லா நாடுகளும் ஒதுங்கி நிற்கத் தன்னந்தனியனாகப் பிரித்தானியா மட்டும் இப்போரில் களமிறங்கியிருக்கிறது. பிரித்தானியாவிற்குள் மட்டும் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இப்புதிய யுத்தத்தை எதிர்த்துக் கோஷமிட்டிருக்கிறார்கள். ஆனால், இவை எதையும் அமெரிக்காகவும் - பிரித்தானியாவும் உடனடியாகக் கருத்திற்கொள்வதாகவில்லை.

இந்த யுத்தத்தில் அமெரிக்கா நன்கு வடிவமைக்கப்பட்ட ஆயுதத்தள பாடங்களுடனும் (பாலைநிலத்திற்கு ஏற்றவாறு) பாலைவன யுத்தத்திற்குப் பயிற்றுவிக்கப்பட்ட இராணுவத்துடனும் களமிறங்கியுள்ளது. இதன்மூலம் ஏற்கனவே குவைத்திலுள்ள தனது இராணுவக் கிராமத்தினை விஸ்தரிப்பது முதல் நோக்கமாகவும், தேவையாகவும் இருக்கலாம். இவ்வாறு நிலைகொள்வதன் மூலம் சதாமைச் சரணாகதி நிலைக்குக் கொண்டுவரமுடியும் அல்லது நினைத்த நேரத்தில் போரை முடுக்கிவிடமுடியும். அதேவேளை, இயங்கக்கூடிய அளவு மசகு எண்ணெயை ஈராக் நிலத்திலிருந்து எடுக்க வாய்ப்புண்டு.

1991 ஆம் ஆண்டு ஈராக்-குவைத்திற்குள் புகுந்தபின் அதிலிருந்து மீளுவதற்காக அமெரிக்காவின் உதவியை குவைத் அரசு பெற்றுக் கொண்டது. ஆனால், அதன் பின்பான காலப்பகுதி குவைத்திற்கு மிக அதிகமான செலவீனங்களையே அமெரிக்கா ஏற்படுத்தியது. ஈராக்கின் அச்சுறுத்தலிலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்காக அமெரிக்க இராணுவத்தைத் தொடர்ந்தும் தனது மண்ணில் வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டதால், அமெரிக்க இராணுவத்திற்கான முழுச்செலவினையும் குவைத் அரசு பொறுப்பேற்க வேண்டியநிலை ஏற்பட்டது. அதேவேளை, அமெரிக்கா தனது படை - நிலைகொண்டிருக்கும் பகுதிகளில் இருந்து மசகு எண்ணெயை குவைத்தின் அனுமதியின்றியே எடுத்துச்சென்றது. கடந்த 12 வருடங்களாகக் குவைத் இதனைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. இந்த யுத்தத்தில் அமெரிக்க, பிரித்தானியத் துருப்புக்களால் கைப்பற்றப்படப் போகின்ற நிலத்தில் மசகு எண்ணெயை எடுத்துச் செல்லும்நிலை இனியும் தொடரும். உலக எண்ணெய்ப் படிவுகளில் 40% மானவை அமெரிக்க நிலத்தில் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவை தோண்டி எடுக்கப்படாமலே மத்தியகிழக்கின் எண்ணெய் வளத்தினை அமெரிக்கா பெற்றுக்கொள்ளப்போகிறது. இதன்மூலம் இனிவரும் காலங்களில்கூட, அமெரிக்கா தனது பொருளாதார முக்கியத்துவத்தினை இழந்துவிட வாய்ப்பில்லை.

அமெரிக்காவின் சர்வவியாபகத் தன்மை என்பது நன்கு வளர்ச்சி கண்டுவிட்டது. அரசியல், பொருளாதார, இராணுவ, தகவல் தொழில்நுட்பம், ஆங்கில மொழியின் ஆதிக்கம், கணினியின் அதியுயர் தேவை என்பன - அமெரிக்காவின் சர்வவியாபகத்திற்குப் பக்கபலமாக இருக்கின்ற காரணிகளாகும். இன்று உலகின் வேகமான செயற்பாடு என்பது அமெரிக்காவினால் கட்டுப்படுத்தக்கூடியதே. அந்தளவு வல்லமை உலகின் வேறெந்த நாட்டிற்குமில்லை. இதனால், அமெரிக்கச் செயற்பாட்டிற்கு எதிர்விளைவைக் கொடுக்கும் வல்லமையும் இல்லாது போய்விட்டது.

இரண்டாவது பாலைவன யுத்தம் ஈராக்கிற்குள் இடம்பெற்றாலும், அயல் நாடுகளுக்கும் அச்சுறுத்தலா



எங்கும் பரவும் கண்டனம்

கவே இருக்கப்போகிறது. இந்த யுத்தத்தில் ஈராக் தனித்து விடப்பட்டதுபோல - அமெரிக்க, பிரித்தானிய நாடுகளும் தனித்துவிடப்பட்டுள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை. இந்த யுத்தம் பலருக்குத் தேவையற்றதாகப்பட்டாலும் - அமெரிக்காவிற்கும், பிரித்தானியாவிற்கும் உலகை ஆக்கிரமிக்கும் தேவையின் அடிப்படையில் மிக அவசியமானதாகிவிட்டது.

ஈராக்கிற்கெதிரான யுத்தத்தில் அமெரிக்கச் செயற்பாட்டிற்கு நிலம்கூட அவசியமானதல்ல. மத்தியதரைக் கடல், செங்கடல், பாரசீக வளைகுடா போன்ற கடற்பிரதேசங்கள் மிகவும் உதவக்கூடிய நிலையிலுள்ளது.

இரண்டாவது, வளைகுடா யுத்தத்தில் பிரதானமாகக் கருத்தில் எடுக்கவேண்டிய விடயம் ஈராக்கிய மக்கள் பற்றியதாகும். அவர்களின் மனநிலை எவ்வாறு உள்ளது என்பதை ஊடகங்களின்மூலம் வெளிவரும் தகவல்களினூடாக 100% அறிந்துகொள்ள முடியாதுள்ளது. அவர்கள் உண்மையாகவே சதாமின் யுத்தப் போக்கிற்கு ஆதரவு தெரிவிப்பார்களேயானால், சதாம் என்ற மனிதனை - அமெரிக்க, பிரிட்டிஷ் இராணுவத்தால் எதுவும் செய்துவிடமுடியாது. மேலைத்தேய ஊடகங்கள் வர்ணிப்பதுபோல 66 வயதிலும் சதாம் வல்லமைமிக்க மனிதனாக இருந்துவிடவே வாய்ப்புண்டு.

# அமெரிக்கா தொடுத்துள்ள போரும்!

**விஜயன்**

---

# 'சினி யாத்ரா' திரைப்பட விழா பார்வைக்கு வரும் படங்கள்



இத்தாலிதான் அவர்கள் கனவுலகு. தம்மிகாவும், லயனலும் திகில் தரப்போகும் பிரயாணம் பற்றியும்,

## மதுயம் தவச

சட்டவிரோத நுழைவும், அதனால் தேனும், பாலும் வழியும் அந்த நாட்டில் அவர்களை எதிர்பார்த்திருக்கும் தங்கமான சந்தர்ப்பங்கள் பற்றியும் கதைக்கின்றனர். இந்த விளிம்பு நிலை, பாதாள உலகப் பாத்திரங்கள் இருவரும் .. அரசியல் வன்முறை, சமூக அவலம் ஆகியவற்றை நோக்கி விரியும் மைய அரங்குநோக்கி வருகின்றனர். அங்கே அவர்கள் அழிவையும், துன்பத்தையும் நோக்கி வெகுவிரைவாக மாறிக்கொண்டிருக்கும். சமூகத்தில் நடிகர்களாகவும், வீரதீரம், காதல், திகில், அதிகாரம் ஆகியவற்றைத் தேடும் நடிகர்களாகவும், முகவர்களாகவும் இருக்கின்றனர். இது பொலிஸாரும், கள்ளரும் என்கிற கதையே. ஆயினும், ஒரு முக்கிய வித்தியாசம் அதாவது, இங்கே வெற்றி பெறுவோரோ, பாதிக்கப்படுவோரோ என்று எவருமில்லை.

இத்திரைப்படம் எண்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து இலங்கையைக் கௌவிக்கொண்ட அரசியல் வன்முறை பற்றிச் சிந்திக்கவைப்பதாகும். எளிமையான உண்மைபோல் தோற்றம் தருகின்ற இக்கதை, வன்முறையில் மூழ்கியுள்ள நாட்டின் பகுதிகளையும், அதன் தேசிய எல்லைகளையும், தேசங்களுக்கிடையேயான அபிலாசைக்ளையும் ஆற்றலுடன் விளக்கிச்செல்கிறது. சினிமாவுக்கென உரு



வாக்கப்பட்ட சொல்லாடல் மூலம் பன்முகக்கலாசார, கிராமப்புற அழகு தோய்ந்த ஜனரஞ்சக, நகர்ப்புறக் கோளமய கலாசாரப் பொருளாதார நிலைகளையெல்லாம் ஊடுருவிச் செல்லவைக்கிறது. ஜனரஞ்சகமும், நவீன கலாயாக்கமும் ஒன்றிணைக்கப்பட்டநிலையில், ஏககாலத்தில் திகில், இன்பியல், துன்பியல் அனைத்தும் வெளிக்கொணரப்படுகின்றன.

---

# பிறந்தநாள் விழாவும் அஞ்சலிக் கூட்டமும் தந்தை செல்வா நினைவாலயத்தில்!

தந்தை செல்வாவின் 105 ஆவது பிறந்தநாள் பிரார்த்தனையும், அஞ்சலி நிகழ்வும் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9 மணிக்கு இந்த நிகழ்வு தந்தை செல்வா நினைவாலயத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் - கிறிஸ்தவ, இந்து, இஸ்லாமிய மதப் பெரியார்கள் பங்குகொண்டு பிராத்தனை நடாத்தவுள்ளனர்.

அன்றையதினம் பி.ப. 4 மணியளவில் சென்.ஜோன்ஸ் தேவாலயத்தில், தந்தை செல்வாவின் 105 ஆவது நினைவு வழிபாடு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து, தந்தை செல்வா பற்றிய நினைவுரையைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வி.கே.சிவஞானமும், இறைசெய்தியை யாழ். மறைக் கோட்டத்தைச் சேர்ந்த அருட்திரு மைக்கல் சவுந்தரநாயகமும் நிகழ்த்தவுள்ளனர். (சு)

---

## பிரதேச செயலகங்களில்


# தரவுகளின்மையால் கிராமங்களை தெரிவு செய்வதில் பிரச்சினை

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள கிராமங்கள் பற்றிய உண்மைத் தகவல்கள் மற்றும் தரவுகள் இல்லாமையினால் அவற்றுக்கான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்வதில் பின்னடைவுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இத்தகைய தரவுகளைப் பெறுவதற்கு அரச செயலகங்களிலோ, பிரதேச செயலகங்களிலோ விவரம் இல்லாமையே காரணம் என்றும் தெரியவருகின்றது.

இதனால், மாவட்ட மட்டத்தில் ஒரு பின்தங்கிய கிராமத்தையோ அல்லது பாதிக்கப்பட்ட ஒரு பிரிவினையோ தெரிவுசெய்வதில் பெரும் சிக்கல்களை எதிர்கொள்ளவேண்யுள்ளது.

# ஈராக் போர்க்களம்



மோட்டார் காவலிருக்க - தரையில் தோண்டிய பள்ளத்தில் - அமெரிக்கச் சிப்பாய் ஒருவரின் உறக்கம்.



ஒருபக்கம் மணற்புயல் - மறுபக்கம் பஸ்ரா அருகே பெய்யும் அடைமழையில் பிரிட்டிஷ் படையினர்.



பஸ்ராவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய வேலி அருகே குறிபார்த்துத் தாக்குதல்.




ஈராக்கிய மக்கள்மீது உடற் சோதனையில் ஈடுபடும் கூட்டுப்படை.



பாலைவனத்தூடு நகரும் டாங்கி, இந்தக் குழந்தையை அசைக்கவில்லையே...!

# தெற்கிலிருந்து பக்தாத் நோக்கிய அமெரிக்க படைநகர்வு நிறுத்தம்!

## அணிகள் மறுசீரமைக்கப்படுகின்றன



திட்டம் பலிக்குமா....?

தெற்கிலிருந்து பக்தாத் நோக்கிய நகர்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, படைகள் மீள் ஒழுங்குபடுத்தப்படவுள்ளதாக அமெரிக்க - பிரிட்டிஷ் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தெற்கில் ஈராக்கிய துருப்புக்களின் கடும் எதிர்ப்பு காணப்படுவதால் இந்த மறுசீரமைப்புப் பணி அவசியம் என இவர்கள் கூறியுள்ளனர். இதற்காக சில நாட்கள் தேவைப்படும் எனவும் இந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அப்பாச்சே ஹெலிகொப்ரர்கள் மூலமான தாக்குதல்கள் எதிர்பார்க்கப்பட்ட பலனைத்தரவில்லை என பென்ரகன் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதன் பயன், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்ததாக மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி மக்கிரிஸ்ரல் குறிப்பிட்டார். காலநிலை மோசமாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமது படை மறுசீரமைப்புக் கால இடைவெளியில் ஈராக் தலைநகர் பக்தாத்தைக் காவல்புரியும் குடியரசுக் காவல் படையினர், தம்மைப் பலப்படுத்துவதைத் தடுக்க விமானத்தாக்குதல் தொடரும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அமெரிக்கப் படைகளை எதிர்த்து ஈராக்கின் பல்வேறு படைப்பிரிவுகள்



ஈராக்கிய குடியரசுப் படைகள்

ஈராக்கில், எதிர்பார்க்கப்பட்டதற்கும் மாறாக அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் எதிர்ப்புகளைச் சந்திப்பதாக படையினருடன் செல்லும் மேற்கத்தைய செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். அமெரிக்க உயர்பீடம் - ஈராக்கியப் படைகள் பின்வாங்கி ஓடுகின்றனர், விரைவில் சதாமின் ஆட்சி கலைக்கப்பட்டுவிடும் எனத் திரும்பத் திரும்பக் கூறினாலும், களநிலைமைகள் வேறுபட்டதாகக் காணப்படுவதாக இச்செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் புதல்வர்களில் ஒருவரான கூசே ஹுசைனின் தலைமையிலான குடியரசுக் காவற்படை, சதாமின் மெய்க்காவற்படையாக, அவரைப் பாதுகாப்பதே தம் பணியாகக் கொண்டுள்ளனர். சதாமின் மற்றொரு மகனான உதயி ஹுசைனின் தலைமையில், பெதயீன் என்ற பரா துருப்புகள் 40 ஆயிரம் பேர், தற்போது அமெரிக்கத் துருப்புகளுக்கு எதிரான கடும் போரில் இறங்கியுள்ளனர். இப்படையில் உள்ள சிரேஷ்ட அதிகாரிகள் அனைவரும், சதாமுடனான குடும்ப உறவைக் கொண்டுள்ளதால், அவர்கள் இறுதிவரை சதாமைக் காக்கப் போராடும் உறுதியுடன் இருக்கின்றனர் எனச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றைவிட, விசேட குடியரசுக் காவற்படை என்ற சிறப்புப் படையணி, தலைநகர் பக்தாத்தை காக்கவென கவசமாகப் பக்தாத்தைச் சுற்றி நிறுத்தப்பட்டுள்ளது. இப்படையின் நான்கு பிரிகேட்டிலும் உள்ள படையினர், சதாமின் சொந்த நகரான கிக்கிரிட் மற்றும் அதையண்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். பல்வேறு ஆயுதங்கள் மற்றும் நகர்சார்ந்த யுத்தத்துக்கான பயிற்சி என்பவற்றை இவர்கள் பெற்றுள்ளனர்.

இவற்றைவிட, பழங்குடி மக்களின் ஆயுதப் படை என்ற ஒன்றும் போர்க்களத்தில் நிற்கிறது. இவர்களுக்கு ஜனாதிபதி சதாமைப் பற்றிய அக்கறை ஏதும் இல்லை. ஆனால், தமது நாட்டுக்குள் நுழையும் பிறநாட்டைச் சேர்ந்த எந்தப் படைகளையும் மூர்க்கமாக எதிர்ப்பதே இவர்களது கொள்கை. இவர்களில் சிறந்த போர் வீரர்களைத் தெரிவுசெய்து, சதாம் தனது படையில் சேர்த்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தெற்கின் எதிர்ப்பைக் குறைக்க வட ஈராக்கில் அமெரிக்கப் படை!

## பரசூட் மூலம் தரையிறக்கம் நடந்தது

கடந்த ஒரு வாரகாலமாக ஈராக்கில் நீடித்துவரும் போர், தற்போது வடமுனைக்கும் விஸ்தரிக்கப்படும் ஏதுநிலை ஏற்பட்டுள்ளது. ஈராக்கின் தென்பகுதி ஊடாக நகரும் அமெரிக்கப் படைகள், கடும் எதிர்ப்பை எதிர்நோக்குவதால், இரண்டாவது முனையை வடக்கில் திறப்பதற்காக

உலகவலம்

நூற்றுக்கணக்கான அமெரிக்கத் துருப்புக்கள் பரசூட்டின் மூலம் தரையிறக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் 173 ஆம் வான் வழித்துருப்புக்கள் இவ்வாறு தரையிறக்கப்பட்டு, குர்திஷ் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு விமான ஓடுதளத்தை தம் கட்டுப்பாட்டில் எடுத்துள்ளனர்.

இதேவேளை, தென் போர் முனையில் பஸ்ரா நோக்கி, அங்குள்ள பிரிட்டிஷ் படைகளை எதிர்கொள்ளவென பல ஈராக்கியத் துருப்புக்கள் கனரக வாகனங்களில் நகர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள்மீது கூட்டணிப் படையின் விமானங்கள் தாக்குதல் நடாத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மற்றோர் தென்நகரான நஸ்ரியாவில் நடந்த கடும் மோதலில், சுமார் 35 அமெரிக்க மரைன் படைத் துருப்பினர் காயமடைந்துள்ளனர். இதைத் தொடர்ந்து இந்நகர் மீது கடும் விமானக் குண்டுவீச்சு நடைபெறுகிறது. மணற்புயலை வாய்ப்பாகக்கொண்டு ஈராக்கியப் படைகள் கடும் தாக்குதலைத் தொடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.





இதேசமயம், அமெரிக்கா மேலும் 30 ஆயிரம் படைகளை ஈராக்கிற்கு அனுப்பிவைத்துள்ளது.

# செம்பிறை உணவு லொறிகளை மக்கள் வழிமறித்துக் கொள்ளை!

குவைத்திலிருந்து ஈராக்கிற்கு அனுப்பப்பட்ட மனிதாபிமான உதவிகள் அடங்கிய ஒரு தொகுதி 'காணாமற்'போய்விட்டதாக குவைத் செம்பிறைச் சங்கம் அறிவித்துள்ளது.

ஈராக்கிய எல்லை நகரான சா.:.பன் பகுதியில், இந்த உணவுத் தொகுதி பொதுமக்களால் கடத்தப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான சமைத்த உணவுப் பார்சல்கள், அரிசி, எண்ணெய், சீனி, பால்மா வகைகள் என்பவை இத்தொகுதியில் அடங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது. அணிகளாகச் சென்ற வாகனங்களை மறித்து, ஈராக்கியப் பொதுமக்கள் இப்பொருட்களை அள்ளிச் சென்றுவிட்டதாகவும், இதைத் தடுக்கக்கூடிய நிலையில் செம்பிறை அதிகாரிகள் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



பஸ்ரா அருகே ஈராக்கியரை இடைமறித்துச் சோதனையிடும் - பிரிட்டிஷ் சிப்பாய் ஒருவர் - பொதுமகன் ஒருவருக்கு எச்சரிக்கை விடுக்கிறார்.



உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை ஒட்டி நமது ஈழநாடு நடத்திய பரிசுப்போட்டியில் வெற்றிபெற்ற அதிர்ஷ்டசாலிகளை, பரிசில்களை வழங்க முன்வந்தோர் தேர்ந்தெடுப்பதைப் படங்களில் காணலாம்.

## பிணையில் விடப்பட்ட...

மாயின் பிணை ரத்துச் செய்யப்பட்டு மேற்படி வழக்கு முடியும்வரை சந்தேக நபர் சிறையில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையில், யாழ். நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா நெப்போலியனைப் பிணையில் விடுதலை செய்தார்.

இதேவேளை, பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்கில், நெப்போலியனை சந்தேக நபராக இனங்கண்டு அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, யாழ். நீதிவானால் பொலிஸாருக்கு உத்தரவு ஒன்று கடந்த காலங்களில் விடப்பட்டிருந்தது.

எனினும், பொலிஸார் இவரை இதுவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தவில்லை என்பதனை, சட்டத்தரணி ரெமிடியஸ், நீதிவான் விக்னராஜாவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இதனால், யாழ். நீதிவான் விக்னராஜா- சந்தேக நபரான நெப்போலியன் ஏன் இது வரை கைது செய்யப்படவில்லை என்பது குறித்த அறிக்கையை இருபத்தியிரண்டு நாட்களுக்குள் சமர்ப்பிக்கும்படியும், மேற்படி சந்தேக நபரைக் கைது செய்யும்படியும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஆனால், நெப்போலியன் பிணையில் விடுதலை செய்யப்பட்டவுடன் வெளியில் சென்றுவிட்டார். நீதிவானால் இரண்டாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டபோது, நெப்போலியன் நீதிமன்றில் இருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(லி)

## மோட்டார்....

இக்காலப்பகுதியில் ஜனவரி மாதத்தில் நடைபெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி இருவர் மரணமடைந்துள்ளனர். 113 பேர் காயமடைந்துள்ளனர். பெப்ரவரியில் இருவர் மரணமடைந்துள்ளனர். 104 பேர் காயமடைந்துள்ளனர். இம்மாதத்தில் இது வரையில் இருவர் மரணமடைந்துள்ளனர். 102 பேர் விபத்துக்களில் காயமுற்றுள்ளனர்.

(111)

## முஸ்லிம்கள்....

அறிவிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் எத்தகைய சூழலிலும் இரு சமூகங்களும் முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடாது என்பதில் இருதரப்பும் அதிகம் கவனம் செலுத்தின. முஸ்லிம்களுக்குரிய காணிகளை எதிர்வரும் 29,30,31 ஆம் திகதிகளில் இனங்கண்டு மீளளிப்பது என இணக்கம் காணப்பட்டுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையின் அடுத்த சுற்றில், நெற்காணி தொடர்பான விவகாரம் பேசித் தீர்க்கப்படவேண்டுமென இலங்கைக் கண்காணிப்புக் குழு கருத்துத் தெரிவித்திருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் வயஸ் ஜெகர்த்தன், நேற்றைய கலந்துரையாடலுக்கு தலைமை தாங்கினார். முஸ்லிம் தரப்புக்கு பிரதி அமைச்சர் சேகுதாவூத் தலைமை தாங்கினார். விடுதலைப் புலிகள் சார்பில் ரமேஷ் தலைமை தாங்கினார்.

## ஏப்ரல் 24 ஆம் திகதி...

களும், கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற முரண்பாடுகளை நீக்குவது தொடர்பாகவும், இந்த வரைபில் முக்கிய கவனம் செலுத்தப்படுவதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எல்லைப் பகுதிகள் மற்றும் ஒருவர் பகுதியை மற்றவர் கடக்கும் நிலையங்கள் தொடர்பாகவும், பரஸ்பரம் கைதிகளை விடுவிப்பது தொடர்பாகவும் இந்த வரைபில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த யோசனைகள் இருதரப்பினரிடமும் முன்வைக்கப்பட்டு, உடனடியாக அதனை ஏற்றுக்கொள்ள கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுத்துவருகிறது.

இதன்படி ஏப்ரல் 24 ஆம் திகதி- அரசாங்கம், விடுதலைப் புலிகள், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர், யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் விசேட கூட்டம் ஒன்றும் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தின் போது வரைபில் இரு தரப்பினரும் கைச்சாத்திடுவர் என்று கண்காணிப்புக்குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதே சமயம், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவது தொடர்பான இறுதிமுடிவு எடுக்கும் கூட்டம், ஏப்ரல் 24ஆம் திகதி நடைபெறலாம் என்றும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொக்கில்சன் தெரிவித்தார்.

## தமிழீழ....

அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கு, மட்டக்களப்பு - அம்பாறை துணை அரசியற் துறைப்பொறுப்பாளர் கிருஷ்ணன் மலர்மாலை அணிவித்தார்.

இறுதியாக தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி சிறப்புரையாற்றினார். இன்றும் இந்நிகழ்வு தொடர்ந்து நடைபெறும்.(10)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
நுண்கலை மன்றம் - 'அழகெழல்' போட்டி - 2003
பரிசளிப்பு விழாவும் கண்காட்சியும்
காலம் :- 29-03-2003 - சனிக்கிழமை பி.ப.2.00 மணி
இடம் :- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.
தலைவர் :- அ.ஜெயதீபன்
வாழ்த்துரைஞர் :- கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் (பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
பிரதம விருந்தினர்:- திரு.பி.விக்னேஸ்வரன் (வலயக் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்:- தொழில் அதிபர் - நா.தெய்வேந்திரம் (நெல்லியடி)
தொழில் அதிபர் - கே.வி.கிருஸ்ணபிள்ளை (உடுப்பிட்டி)
(ஓவியப் போட்டியின் படைப்புக்கள் கண்காட்சிக்கு வைக்கப்படும்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நுண்கலை மன்றம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
(294)
விளம்பர அன்பளிப்பு:- லிங்கம் கூல்பார்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இன்றுமுதல் பிரதான வீதி, பருத்தித்துறையில் தனது சேவையை மங்களகரமாக ஆரம்பிக்கின்றது
பி.எஸ். மல்ரி ரேடர்ஸ்
சகலவிதமான மின்னியல், இலத்திரனியல் (ஒரிஜினல் ஜப்பான் தயாரிப்பு - T.V., டெக், றேடியோ, கசற் றைகோடர், ஓடியோ, வீடியோ CD பிளேயர்கள்) பொருட்களை மலிவான விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றிலிருந்து நீங்கள் நாடவேண்டிய இடம்
P.S. MULLTI TRADERS
395/6, Main Street, Point pedro.
(293)
☆ குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும் விசேட சலுகைகள் வழங்கப்படும்

பிற்போடப்பட்டுள்ளது
A/L - 2003
வணிகக் கல்வி கருத்தரங்கு
யாழ்.மத்திய கல்லூரியில் இன்று நடைபெறும் வர்த்தகப் பிரிவிற்கான "வழிகாட்டல் கருத்தரங்கு"இற்கு மாணவர்கள் பங்கேற்பதற்காக, எமது நிறுவனத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்த "வணிகக் கல்வி" கருத்தரங்கு பின்வரும் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.
30-03-2003
ஞாயிறு காலை 8.30 (மு.நே)
(292)
DMI யாழ்.நகர்

## நமது ஈழநாடு வழங்கும் உலகக் கிண்ண கிரிக்கெட்- 2003 பரிசுப் போட்டி

### பரிசுகள் வென்றோர் விபரம்



முதற்பரிசு - செல்வி சுகந்தி குணரத்தினம்
444, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
வழங்குவோர்- இரத்தின கோபால்ஸ்

இரண்டாம் பரிசு - த.விஜயன்
298, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
வழங்குவோர்- 1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் 2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)

மூன்றாம் பரிசு - தங்கராசா பிரியதரன்
பழைய தபாற்கந்தோர், சித்தன்கேணி.
வழங்குவோர்- சந்தியா மல்ரிகோப்பரட்

ஆறுதல் பரிசு - ஷோபா விநாயகம்
மலர் அகம், புலோலி தெற்கு, புலோலி.
வழங்குவோர்- நவகலா

ஆறுதல் பரிசு - நடராசா கோபிநாத்
17/11, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்.
வழங்குவோர்- மெகீஸ்

ஆறுதல் பரிசு - இராசேந்திரன் துர்க்கா
உசன், மிருசுவில்.
வழங்குவோர்- யாழ் வணிக நிலையம்

ஆறுதல் பரிசு - தி.செல்வலட்சுமி
15/1, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
வழங்குவோர்- ரவி அன் ராஜ் சில்க்ஸ்

பரிசில்களை வென்றோர் ஏப்ரல் 5 ஆம் திகதிக்கு முன்பாக நமது ஈழநாடு பணிமனையுடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

ஆறுதல் பரிசு - இ.தர்மலிங்கம் கஜல்ராஜ்
நீதிமன்ற வீதி, மல்லாகம்.
வழங்குவோர்- சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

ஆறுதல் பரிசு - மா.மகாலிங்கம்
லிங்கவாசா, கைதடி மேற்கு, கைதடி.
வழங்குவோர்- தில்லையம்பதி மோட்டோர்ஸ்



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.